தமிழ்

# PC TIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை


June 2006

පීසී ටයිම්ස් பீசீ டைம்ஸ்

ISSUE 03 Rs. 30/-

9 771391 502008

ஜீன் 2006

மலர் 1 - இதழ் 4





இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை



ஜப்பான் நாட்டு Honda மற்றும் ATR நிறுவனங்கள் இணைந்து தயாரித்த மனித மூளையை ஒத்த சிந்திக்கும் திறன்கொண்ட Robo ஒன்று, Honda ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் Tomohiko Kawanabe இன் V வடிவ விரல் அசைவுக்கு பதிற்குறியாற்றுகிறது.

தமிழ் PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

**Editor**
K.Rushangan
rushangan@yahoo.com

**Layout & Graphic Design**
R.Vinothini

**Cover Design**
K.S.Anurjan

**Editorial Coordinator**
R.R.Jeyakeshan

**Assistant Publishing Manager**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayake

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Subscription Executive/Sales**
Ranjith Rupasinghe

**Brand Manager**
Sujith Pathirannehe

wijeyanewspapers
helping shape opinions

**Printers & Publishers**
WIJEYA NEWSPAPERS LTD
No.08, Hunupitiya Cross Road,
Colombo-02,
Sri Lanka
Tel: +94 11 2314714
email: pctimes@wijeya.lk

# அனைவருக்கும் அறிவியல்

“கணினி பற்றிய சிறிய அறிவைக் கொண்டிருந்த நான் இப்போது ஒரு மின்னஞ்சல் முகவரிக்குச் சொந்தக்காரனாகி விட்டேன்” என்ற வாசக அன்பரின் கடிதமொன்றைக் கண்டபோது மகிழ்ச்சியடைந்தோம்.

மற்றுமொரு வாசக அன்பரும் எமது ஏப்ரல் இதழில் வெளியான "மின்னஞ்சல் முகவரி பெறுவது எப்படி?” என்ற வழிகாட்டலின்படி புதிய மின்னஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்கி அதிலிருந்தே எமக்கு மின்னஞ்சல் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

அனைவருக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பரவலாக்கும் தனது இலக்கில் தமிழ் PC Times வெற்றி காணத் தொடங்கிவிட்டது என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்துகிறது.

போதியளவு கணினி மற்றும் இணைய இணைப்பு வசதிகளைக் கொண்ட நகர்ப்புறங்களிலிருந்து மட்டுமன்றி, நவீன வசதிகள் குறைந்த கிராமங்களிலிருந்து கூட எமக்குக் கிடைக்கப்பெறும் கடிதங்கள், தமிழ்கூறு நல்லுலகின் “அறிவுப்பசி”க்குச் சான்று பகர்கின்றன. வெறும் பொழுது போக்கு என்பதற்கு அப்பால், அறிவியலுடன் கூடிய களிப்பூட்டலுக்கு அதிக வரவேற்பிருக்கிறது என்பதை PC Times வாசகர்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உலகில் அதிகளவு வலைத்தளங்களைக் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பதில் பெருமை காணும் நாம், இந்த அறிவியல் தேட்டத்தை அனைவருக்கும் விரிவாக்குவது அவசியமாகிறது.

இன்று உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள் அறிவியலிலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் காட்டிவரும் ஈடுபாடே, வலைத்தளங்களில் தமிழ் மொழி இந்தளவு செல்வாக்குச் செலுத்தக் காரணமாக இருக்கிறது. எனினும், தமிழ் வலைத்தளங்களின் தொகை பெருகியிருக்கின்ற அளவுக்கு, தரமான தளங்கள் போதியளவு தமிழில் இல்லை என்ற குறையையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

உலகெங்கும் வாழ்ந்து, அறிவியல் தேட்டத்தில் தேர்ந்திருக்கின்ற தமிழர்கள், இன்று உலகை ஒரு குக்கிராமமாக்கும் இணைய வசதிகளைப் பயன்படுத்தி, அந்த அறிவியல் தேட்டத்தை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

அறிவில் தனியுடைமை என்பது கிடையாது. அது அனைவருக்கும் பொதுவானது என்கின்ற Open Source கலாசாரத்தின் வழிகாட்டலில் நாமும் முன்னேறுவோம்.


- ஆசிரியர்

CONTENTS

உள்ளே........


செய்திகள் .......................... 03

உங்கள் கணினியைப் பராமரித்தல் ...................... 04



அலன் டூரிங்...................... 08





கணினியிலே இனிய தமிழ் ........ 10

Ms Word ................................ 14

Photoshop புதுமைகள் ........ 16





Ms Excel ................................ 18

Mail Box ................................ 20

Help Desk ................................ 22

Entertainment Times .............. 24

புதுவரவு .......................... 26





Foss நோக்கிய நகர்வு ........... 28







ஸ்க்ரீன் சேவர் உருவாக்கலாம் .. 30




# Google Online Calendar




உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் எவரும் பயன்படுத்தக்கூடிய Online Calendar ஒன்றை பிரபல இணையத் தேடுதளம் மற்றும் மின்னஞ்சல் சேவை வழங்குநரான Google அறிமுகப்படுத்தியுள்ளது. உங்களுடைய வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளையும் பதிந்துவைத்துத் திட்டமிட்டுச் செயற்படக்கூடியதாக இருப்பதுடன், உங்களுடைய இந்தத் திட்டமிடலை நீங்கள் விரும்பினால் உங்கள் உறவினர், நண்பர்களுடனும் பகிர்ந்துகொள்ளக்கூடியதாகவும் இருப்பது Google Online Calendar இன் சிறப்பம்சமாகும்.

உங்களுடைய நாளாந்தச் செயற்பாடுகள், மற்றும் செய்யவேண்டியிருக்கும் பணிகள் தொடர்பான பதிவுகளை இந்த நாட்காட்டியில் பேணும் அதேவேளை, அதை உங்கள் உறவினர், நண்பர்களுடனும் பகிர்ந்துகொள்ளும்போது, கூட்டாக உங்களிடையே செயற்பாடுகளைத் திட்டமிட முடிவதுடன், ஒருவருடைய திட்டங்களை அறிந்துகொண்டு அதற்கேற்ப மற்றையவர் அவருடனான தன்னுடைய திட்டங்களை வகுக்கக்கூடியதாகவும் இருக்கும்.


இதிலுள்ள முக்கியமான நற்செய்தி என்னவென்றால், இந்த Google Online Calendar ஐப் பாவிப்பதற்கு உங்களிடம் Gmail Account ஒன்று இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், இந்தச் சேவையை நீங்கள் இலவசமாகவே பெற்றுக்கொள்ளவும் முடியும் என்பதுதான். Google Online Calendar சேவையை http://www.google.com/calendar என்ற முகவரியில் sign up செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

# FOSS மூலம் 50 ஆயிரம் ரூபா

Open Source மென்பொருள்களை உருவாக்குவதற்கு தகவல் தொழில்நுட்பத்துறை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் FOSSCode 2006 என்ற புதிய திட்டமொன்றை இலங்கையின் Free and Open Source Software(FOSS) குழுமம் அறிமுகப்படுத்தியுள்ளது. உலக அளவில் Google இன் Summer of Code Programme ஐ ஒத்ததாக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில் பங்கேற்குமாறு, இலங்கையின் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த கணினி விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள் Open Source துறையில் தமது புதிய Source திட்டங்களைச் சமர்ப்பித்து, தங்கள் முயற்சிக்கான வெகுமானமாக 50 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கணினி மென்பொருள்களின் Source Code ஐ அனைத்துப் பயனாளர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக வழங்குவதுடன், அந்த மென்பொருள்களில் தாம் விரும்பிய மாற்றங்களையும் செய்ய அனுமதிக்கும் Open Source கலாசாரத்தை ஊக்குவிக்கும் இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டுமானால், FOSSCode2006 இன் வலைத்தளமான http://code.foss.lk க்குச் சென்று மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

# E-PAPER




பக்கம் பக்கமாகப் புரட்டிப் புரட்டிப் படிக்கும் பத்திரிகையை, கையடக்கமான ஒரு இலத்திரனியல் கருவிக்குள் அடக்கும் தொழில்நுட்பம் பெல்ஜியம் நாட்டில் பரீட்சார்த்தமாகச் செய்துபார்க்கப்பட்டுள்ளது. பெல்ஜியம் நாட்டு நிதியியல் பத்திரிகையான De Tijd இந்த இலத்திரனியல் பத்திரிகையின் பரீட்சார்த்த பதிப்புக்களை வெளியிடத் தொடங்கியுள்ளது. குறைந்த மின்சக்தியில் இயங்கும் Screen ஐக் கொண்ட கையடக்கமான இந்தக் கருவி Digital Ink தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது.

தற்போது பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, பத்திரிகைத் துறையின் iPod என்று வர்ணிக்கப்படும் இந்தக் கருவி, மிக வேகமாக உலகம் எங்கும் பரவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பல இலத்திரனியல் ஊடகங்களின் வருகை, மற்றும் அதிகரித்துவரும் பத்திரிகை அச்சாக்கச் செலவு போன்றவற்றால் பத்திரிகை விநியோகம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்று வேதனைப்படும் வெளியீட்டாளர்களுக்கு e-paper ஒரு இனிப்பான செய்தியாக இருக்கிறது. புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை Download செய்யும் வசதிகொண்ட இந்தக் கருவியின் மூலம், பத்திரிகைத்தாள் செலவீனம், அச்சாக்கச் செலவுகள், விநியோகச் செலவுகள் எவையுமின்றி பத்திரிகைகளை வாசகர்களின் கைகளுக்குச் சேர்க்க முடிகிறது. தற்போது Philips நிறுவனத்தினால் சந்தைக்கு விடப்பட்டிருக்கும் இந்தக் கருவியை SONY நிறுவனமும் விரைவில் தயாரிக்கவிருக்கிறது.

# உங்கள் கணினியைப்


உங்களுடைய கணினியை தொடர்ச்சியாக ஒரு பிரச்சினையும் இன்றிப் பாவிக்கவேண்டுமானால், அதனை நீங்கள் ஆரோக்கியமான கணினியாகப் பேணுவது அவசியம் **ஆரோக்கியமான கணினி** என நான் இங்கு குறிப்பிட்டது அதிகம் பிரச்சினை இன்றி சுமுகமாக இயங்கும் கணினியையே. கணினிகளுக்கும் பிரச்சினைகள் உண்டு. அவ்வப்போது இந்தப் பிரச்சினைகள் தோன்றும். எனினும், ஒழுங்கான தற்காப்பு பராமரிப்பை (Preventive Maintenance - PM) மேற்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள முடியும். இந்தத் தற்காப்பு பராமரிப்பை (PM) முக்கியமாக இரண்டு பிரதான வகைகளாகப் பிரிக்க முடியும்.




1. தரவுகளைப் பராமரித்தல் (Data Maintenance - Anti Virus Software, Regular Backups, Defragmenting, Scanning Disk drives)
2. கணினியின் பாகங்களைப் பராமரித்தல் (கணினியின் உள் மற்றும் வெளிப்பகுதிகளைச் சுத்தப் படுத்துதல்)

**தற்காப்பு பராமரிப்பு அல்லது PM என்றால் என்ன?**

“வருமுன் காப்போம்” என்று தமிழில் பிரபலமான ஒரு சொற்பிரயோகம் உண்டு.



நோய் வந்தபின் குணப்படுத்துவதை விட, நோய் வராமல் தடுத்து நிறுத்துவதே சிறந்தது என்று இதற்கு விளக்கம் சொல்வார்கள். எந்தவிதமான ஒரு பிரச்சினைக்கும் வந்தபின் தீர்வு தேடுவதை விட, பிரச்சினை வராமல் தடுத்து நிறுத்துவதே சிறந்தது. எனவே தற்காப்பு பராமரிப்பு (PM) மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பல தலையிடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்!!!

**தரவுகளைப் பராமரித்தல்**

தரவுகளைப் பராமரித்தல் என்பது Hard Disk Intergrity மற்றும் Operating system ஆகியவற்றைப் பராமரித்தல் ஆகும். ஒழுங்கான Backups மற்றும் Anti Virus Software என்பன இல்லாமல் உங்கள் கணினியை வெறுமனே வெளிப்பார்வைக்கு மினுமினுப்பாக வைத்திருப்பதால் மட்டும் பிரயோசனம் இல்லை. தரவுகளை தற்காப்பு பராமரிப்பு செய்வதால் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை என்று பார்ப்போம்.


## Back Up

நீங்கள் கணினியில் பதிவு செய்யும் அனைத்துத் தரவுகளையும் Back Up செய்து கொண்டால் பிரச்சினைகள் ஏற்படும்போது தரவுகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். உதாரணமாக உங்களுடைய கணினி பழுதடைந்து Format செய்யவேண்டிய நிலை ஏற்படும்போது, உங்கள் கணினியின் வேறொரு Drive ல் back up காணப்பட்டால் தரவுகளை மீளப்பெற உதவியாக இருக்கும். தரவுகளை Back up செய்வதற்குத் தனியானவொரு பகுதியை (Separate Partition) பயன்படுத்துவது சிறந்தது. சிலர் இதனை வீண்வேலையெனக் கருதக்கூடும். எனினும், கணினியில் Operating system ஐ மீண்டும் Install பண்ணும்போது முன்னர் உங்கள் கணினியில் காணப்பட்ட மென் பொருள்களின் Drivers காணாமல் போனால் என்ன செய்வீர்கள்? கற்பனை செய்துபார்க்கவே கடினமாக இருக்கிறதல்லவா? எனவே உங்கள் கணினியை அடிக்கடி Back Up செய்து கொள்ளுங்கள்.


பரிந்துரை :- வாரத்துக்கு ஒரு முறையாவது Back up செய்து கொள்வது சிறந்தது.


## Defragmenting

ஒழுங்காக, வேகமாக வேலை செய்யும் உங்கள் கணினி சிறிது காலத்துக்குப் பின்னர் ஆமை வேகத்தில் இயங்குகிறதா? இதற்குத்தான் உங்கள் கணினியில் உள்ள கோவைகளை (Files)



# பராமரித்தல்






ஒழுங்காக உரிய முறையில் அடுக்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்வது. கணினியில் சேமிக்கப்பட்ட கோவைகள் அங்கும், இங்குமாக எங்கும் பரவி ஒழுங்கற்றுக் காணப்படுவதே கணினி இயங்கும் வேகம் குறைவடைவதற்குக் காரணமாகும் (Fragmented/Disperse).

Hard Disk இல் காணப்படும் Cluster எனப்படும் சிறியளவிலான பல பகுதிகளிலேயே கோவைகள் சேமிக்கப்படுகின்றன. ஒரு Cluster இல் 4 Kilobytes அல்லது அதை விட சற்று அதிகமான அளவு கொண்ட கோவைகளையே சேமித்து வைக்க முடியும்.

உங்களுடைய File system ஐப் பொறுத்து இதன் அளவு வேறுபடலாம் (NTFS of FAT32). இதனால் நீங்கள் Store பண்ணும் files இன் அளவு ஒரு Culster ஐ விடப் பெரிதாகக் காணப்பட்டால், உதாரணமாக 20Kb ஆக இருந்தால் அது ஐந்து Culster களில் வேறுவேறாகச் சேமித்து வைக்கப்படும். பெரும்பாலும் தரவுகள் அருகருகாகவுள்ள Culster களில் பதிவு செய்யப்படும். எனினும், அந்தத் தரவு களில் மாற்றங்கள் செய்திருந்தால் hard disk ல் அந்தத் தரவுகள் சிதறிக் காணப்படும். இதன் காரணமாக கணினியில் file ஒன்றை நீங்கள் திறக்கும்போது, அது சேமிக்கப் பட்ட ஒவ்வொரு Cluster களிலிருந்தும் தரவுகளைத் தேடி எடுக்கவேண்டிய நிலை ஏற்படுவதால் தாமத மேற்படும்.

உங்கள் கணினியை நீங்கள் defragment செய்யும்போது, இவ்வாறு சிதறிக்கிடக்கும் தரவுகளை ஒழுங்கு படுத்தி அருகருகாகவுள்ள Cluster களில் அடுக்கிப் பேணமுடியும்.

**கணினியை Defrag செய்வதற்கு:**

* My Computer
* Partition இலும், "Properties" இலும் Right Click செய்யுங்கள்.
* Go to the tab, "Tools"

பரிந்துரை :-மாதத்திற்கு ஒருமுறையாவது defragment செய்துகொள்ளுங்கள்.


## Scandisk or Error Checking

மின்சாரம் துண்டிக்கப்படுதல் போன்ற திடீர்த் தடங்கல்களால் கணினி இயக்கம் தடைப்படும் போது, நாம் செய்துகொண்டிருக்கும் வேலை பல சமயங்களில் பாதிப்படைவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் கணினியை இயக்கும்போது அது scandisk ற்குச் செல்வதால் நீண்டநேர தாமதம் ஏற்படும். எனினும் ஒழுங்கற்ற முறையில் shotdown செய்யப்பட்டமையால் கணினியில் ஏற்படக்கூடிய பிரச்சினையை தவிர்ப்பதற்கு scandisk செய்வது நல்லதே. எதிர்காலத்தில் கணினி முற்றாகச் செயலிழந்து போவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு இது உதவுகிறது என்பது பலருக்குத் தெரிவதில்லை.

பரிந்துரை :- கணினியை ஒழுங்கான முறையில் shutdown செய்யாத ஒவ்வொரு தடவையும், அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை scandisk செய்வது சிறப்பு.

**Virus Guard** பயன்படுத்தல்

வைரஸ்கள் எமது கணினிகளை அழிப்பதற்கு துரத்திக்கொண்டு இருக்கின்றன என்பது எமக்குத் தெரிந்த விடயம். அனைத்துக் கணினிப் பாவனையாளர்களுக்குமே இந்த வைரஸ் அச்சம் காணப்படுகின்றது.



எனவே கணினிப் பாவனையாளர்கள் ஏதாவது ஒரு Antivirus மென்பொருளை கணினியில் install செய்து கொண்டு அடிக்கடி அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சில பிரபலமான Antivirus மென்பொருள் கள் வருமாறு:


**McAfee Antivirus Software**

**Norton Antivirus 2006**

**F-Secure Antivirus Software (www.fsecure.com)**

நீங்கள் பயன்படுத்தும் Antivirus மென்பொருள் மிகப் பிந்திய வெளியீடா? என்பதைக் கவனிப்பதுடன், அடிக்கடி அதனைப் புதுப்பித்துக்கொள்ளவும் வேண் டும் (Update).

பரிந்துரை :- தினமும் அல்லது கிழமையில் 3தினங்களா வது Antivirus மென்பொருளைப் பயன்படுத்தி கணினியைப் பரி சோதிக்கவும்.




Anti Spyware Software ஐ இயங்கச் செய்வதுடன், Pop-up blocker ஐ உங்கள் கணினியில் Install பண்ணிக் கொள்ளவும்.

சில இணையத்தளங்களூடாகப் பெறப்படும் வைரஸ் காப்பு மென் பொருள்களைப் பயன்படுத்தும்போது தேவையற்ற Popupகள் தோன்றும். இதனைத் தவிர்ப்பதற்கு www.download.com என்னும் இணையத் தளத்தி லிருந்து இலவசமாகவோ, அல்லது, www.microsoft. com என்ற தளத்திலிருந்தோ வைரஸ் காப்பு மென் பொருள்களை Download செய்துகொள்ள முடியும்.



குறிப்பு :- Third Party Software களை Download செய்யும்போது அவதானமாக இருங்கள். நீங்கள் Download செய்யும் குறிப்பிட்ட மென்பொருள் உங்கள் நண்பர்கள் பலராலும் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லது, Microsoft Antispyware மென்பொருளை Download செய்யலாம். இதற்கு Original Copy of Windows பிரதி உங்களிடம் இருக்கவேண்டும்.




## உ. கணினியின் பாகங்களைப் பராமரித்தல்

கணினி பாகங்களைச் சுத்தப்படுத்தமுன் அனைத்து மின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளனவா? என்பதை யும், யாராவது ஒரு வயதுவந்தவர் அருகில் உள்ளாரா? என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அவ்வாறு உங்களால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாவிட்டால் கணினி பராமரிப்பாளர்களிடம் கணினியை ஒப்படை த்து விடுங்கள். இந்தப் பகுதி உங்கள் கணினியின் வெளிப் பாகங்கள் பற்றியதாகும்.

தூசி, ஈரலிப்பு, மற்றும் தவறான பயன்பாடு என்பனவே கணினி யின் பிரதான எதிரிகளாவர்.

உங்கள் கணினி வைக்கப்பட்டி ருக்கும் இடம் தூசிகள் படியாத இடமாக இருப்பதுடன், கணினி யின் விசிறிக்குத் தேவையான குளிர்ந்த காற்றைப் பெற்றுக்கொள் வதற்குப் போதுமான இடவசதி கொண்டதாகவும் இருக்கவேண்டும். பொதுவாக கணினியின் Power Unit Fan மற்றும் Cooling Fan போன்ற பகுதிகளிலேயே அதிகம் தூசி படியும். இந்தத் தூசிகளை பஞ்சுத்தன்மையற்ற துணிகளைப் பயன் படுத்தி அகற்றிவிடுங்கள்.



Motherboard மற்றும் Expansion Card போன்ற வற்றைத் துப்பரவாக்கும் போது Static Proof Brush ஐப் பயன்படுத்துங்கள். தூசிகளை அகற்றும் காற் றழுத்த இயந்திரத்தைப் (Vacuum Cleaner) பயன் படுத் தும்போது, கணினி யின் உட்பாகங்களைத் துப்பரவு செய்வதற்கென விசேடமாக வடிவமைக் கப்பட்ட கருவியா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏனெனில், வழமையான Vacuum Cleanerகள் தோற்றுவிக்கும் Static Electric Power இனால் கணினி யின் உட்பாகங்கள் பாதிப்படையக் கூடும்.

கணினியின் உட்பகுதியில் நீர் படிவதைத் தடுப்பதற்கு சிலிக்கா ஜெல் (Silica Gel) பக்கற்றுக்களை உள்ளே

வைக்கலாம். இது அதிகளவு நீர்த்தன்மையை அல்லது ஈரலிப்பை உறுஞ்சிக்கொண்டுவிடும். (அவதானம்: சிலிக்கா ஜெல் நச்சுத்தன்மையானது. சிறுவர்கள் எடுக்காதவிதத்தில் வைக்கவும்)

கணினி இயங்கிக்கொண்டிக்கும்போது அதனை இடம் மாற்றவோ அசைக்கவோ வேண்டாம். அவ்வாறு செய்தால் Hard disk இயக்கத்தில் பாதிப்புக்கள் ஏற்படும்.

மேலும், Hard Disk இடத்துக்கிடம் கொண்டுசெல்வதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்படவில்லை. எனவே, தரவுகளைக் கொண்டு திரிவதற்கு Data Travelar அல்லது External Hard Disk ஐப் பயன்படுத்துங்கள்.



அனைவராலும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் Cleaner களைப் பயன்படுத்தி CD மற்றும் DVD ROM களைச் சுத்தப்படுத்தவும். சில Cleaner கள் உங்கள் CD-ROM Drive ஐப் பழுதாக்கிவிடுமென்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

உங்கள் Monitor இன் மேற்பரப்பை வாராந்தம் சுத்தப்படுத்துவதுடன், ஏனைய பகுதிகளை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும் சுத்தப்படுத்துங்கள்.

எச்சரிக்கை: Monitor இன் Cover ஐக் கழற்றவேண்டாம். அனுபவம் வாய்ந்த கணினித் தொழில்நுட்பவியலாளர்கள் மாத்திரமே அதனைக் கையாளவேண்டும்.

கணினி வைக்கப்பட்டிருக்கும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பேணவேண்டும். சுற்றுப்புறத்தில் தூசிகள் இருந்தாலும் அது கணினியைப் பாதிக்கக்கூடும்.

இவையெல்லாம் உங்கள் கணினியை நல்ல நிலையில் பேணுவதற்கான சில அடிப்படை ஆலோசனைகளே. இவற்றைப் பின்பற்றிவந்தால், உங்கள் கணினி பிரச்சினைகள் ஏதுமின்றி முன்னரைவிட விரைவாகவும், சுமுகமாகவும் இயங்குவதைக் காணலாம். கணினியொன்றைப் பயன்படுத்தும்போது, அதன் பாவனையாளர் என்ற வகையில் அதனை எவ்வாறு பராாமரிக்க வேண்டுமென்பதையும் நாம் அறிந்துகொண்டிருக்க வேண்டும். இதன்மூலம் கணினி பழுதுபார்ப்பவர்களிடம் அடிக்கடி கணினியை எடுத்துச் செல்லும் பிரச்சினை குறைவடைவதுடன், உங்கள் நேரமும், பணமும் மீதப்படுத்தப்படும். எனவே, தற்காப்பு பராமரிப்பைச் செய்துபாருங்களேன்.

Heshan Mudannayaka

**தமிழில்: ம.பிரசாத், நன்றி:** it.com



# Font பிரச்சனையா?

இணையத்தளங்களைப் பார்வையிடும்போது பலருக்கு எழுகின்ற முக்கிய பிரச்சினை எழுத்துரு (Font). இன்று எமது மொழியில் ஏகப்பட்ட இணையத்தளங்கள், வலைப்பக்கங்கள் இணையத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன, உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தமது தளங்களுக்கு என்று ஒவ்வொரு எழுத்துருக்களைப் பயன்படுத்துகின்றன. யுனிக்கோட் எழுத்துரு வந்த பின்னரும் பலர் பழைய எழுத்தக்களை பாவிப்பதை கைவிடவில்லை.

அதற்காக அந்த எழுத்துருக்களை எல்லாம் எமது கணினியில் நிறுவிக்கொண்டிருக்க முடியுமா?. சரி நிறுவிக்கொள்வதற்கும் எல்லா இணையப் பாவனை நிலையங்களின் (Net Café) கட்டுப்பாடுகளும் இடம்கொடுக்கின்றனவா? இதற்கு என்னதான் தீர்வு? இருக்கிறது தீர்வு.

குறித்த Font இனை பதிவிறக்கம் செய்து சாதாரண கோப்பாக Desktop இல் சேமித்து விட்டு அதனை இரட்டைச் சொடுக்கல் செய்து திறந்து வைத்துக்கொண்டு குறித்த இணையத் தளத்தினைப் பார்வையிடுங்கள். இப்போது உங்கள் பிரச்சினை தீர்ந்துவிட்டதல்லவா.

இதைவிட ஒரு செயலியில் திறந்துவைத்திருக்கும் எழுத்துருவினைப் பயன்படுத்தவும் முடியும். அதாவது குறித்த செயலியின் எழுத்துருக்கள் பகுதியில் உங்களால் திறந்து வைத்திருக்கப்பட்டிருக்கும் எழுத்துரு இருப்பதை/பட்டியலிடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இனி என்ன உங்கள் பாடு கொண்டாட்டம் தானே!

# அலன் டூரிங் என்னும் அற்புதம்







-Dr.வெங்கட்ரமணன், கனடா-

யூன் 7,2006 உடன் அலன் டூரிங் சயனைட் கலந்த ஆப்பிளைத் தின்று தற்கொலை செய்துகொண்டு 52 வருடங்களாகின்றன. அலன் மாத்திஸன் டூரிங் **(Alan Mathison Turing)** என்ற அற்புதம் நிகழ்ந்திருக்காவிட்டால் என்னால் கணினித் திரையில் இதை எழுதவும் முடியாது, உங்களால் படிக்கவும் முடியாது. இரண்டடிமான எண்களாகப் (Binary) பகுத்தெழுதி கணிப்பு நடத்த முடியும் என்று காட்டியவர் அலன் டூரிங். சுருக்கமாகச் சொன்னால் நவீன கணினியின் தந்தை.

## நவீன கணினியின் தந்தை.





சர்வம் கணினிமயம் என்று ஆகியிருக்கும் இந்தக் காலங்களில் அலன் டூரிங்கைப் பலருக்கும் தெரியாதிருப்பது கொடுமைதான். 1912 ஆம் ஆண்டு பிறந்த டூரிங் 1938இல் அமெரிக்காவின் புகழ்பெற்ற பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அது இரண்டாம் உலகப் போர் சமயமாக இருந்ததால் டூரிங் விரைவிலேயே தன்னுடைய தாய்நாடான பிரிட்டனுக்குத் திரும்பவேண்டியிருந்தது. அங்கே ஜெர்மானியர்களின் போர்க்கால சங்கேதங்களைத் தகர்க்கும் (Decryption) வேலையில் சேர்ந்தார்.

## நவீன கணினியின் தந்தைக்கு நேர்ந்த அவல முடிவு!

இரண்டாம் உலகப்போரின்போது ஜெர்மனியின் எனிக்மா இயந்திரம் அதனுடைய சங்கேதத்தை மாற்றிக்கொண்டேயிருக்க எந்த வகையிலும் ஜெர்மனியர்களின் தகவல்களைப் புரிந்துகொள்ள முடியாமலிருந்தது. அப்பொழுது டூரிங் தயாரித்த கணினி செய்முறைகள் (Algorithms) ஐ கொண்டு எந்த அடிப்படையில் எனிக்மாவின் சங்கேதங்கள் எப்படி மாறுகின்றன என்பதைத் துல்லியமாக கணிக்க முடிந்தது. தொடர்ந்து A+-போட் என்ற நீர்மூழ்கியின் சங்கேதங்களைப் பிரிட்டானியர்கள் புரிந்துகொள்ள அந்த நீர்மூழ்கி முறியடிக்கப்பட்டு அட்லாண்டிக் போரில் நேசநாடுகளுக்கு வெற்றி கிடைத்தது. இது இரண்டாம் உலகப்போரின் ஒரு மிக முக்கிய நிகழ்வாகும். (கிட்டத்தட்ட இதுதான் உயர்தொழில்நுட்ப அடிப்படையிலான போர்த்தந்திரத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி). தொடர்ந்து எண் கணிதம் (Number Theory), நேரிலி கணக்கீடு (Nonlinear computation), நேரிலிக் கணக்கீட்டின் அடிப்படையில் உயிரியல் பெருக்கங்களை வடிவாக்கல் (Nonlinear coputation), பிணைப்பு வலைகள் (Neural networks) என்று பலதுறைகளில் அலன் டூரிங் மிக முக்கியமான பங்களிப்புக்களைத் தந்தார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க அவரது தனிப்பட்ட வாழ்வு தொடர்ச்சியாகச் சோகமானதாகவே இருந்தது. அலன் டூரிங்குக்கு இயற்கையிலேயே ஓரினச்சேர்க்கை (Homosexual) நாட்டமிருந்தது. ஓரினச்சேர்க்கையாளர்களைப் பற்றிய அறிவியல் ரீதியான புரிதல்கள் சற்றும் இல்லாத அந்தக் காலங்களில் அவர்கள் சமூகவிரோதிகளாகக் கருதப்பட்டனர். 1950இல் ஓரினச் சேர்க்கையாளர் என்று அடையாளம் காணப்பட்ட டூரிங் 1952 மான்செஸ்டர் நகரில் இன்னொரு ஆணுடன் உறவுகொள்ள முயற்சித்தபொழுது போலீஸால் பிடிக்கப்பட்டார். சிறைத்தண்டனையைத் தவிர்க்க பெண்களுக்கு இயற்கையில் சுரக்கும் எஸ்ட்ரோஜன் ஹார்மோனை ஊசிமூலம் ஒரு வருடம் செலுத்திக்கொள்ள அவர் ஒத்துக்கொண்டார். ஓரினச்சேர்க்கையாளர் என்ற ஒரே காரணத்திற்காக அலன் டூரிங் அரசாங்கத்தின் உயர் பதவிகளை இழந்தார். தன்னைக் கவர்ந்திழுக்கும் தத்துவத் தேட்டம் ஒருபுறமும், ஓரினச்சேர்க்கை ஆர்வம் மறுபுறமும், இயற்கைக்கு மாறாக உடலில் புகுத்தப்படும் பெண் தன்மை இன்னொரு புறமும் என்று இழுக்க அலன் டூரிங்கின் வாழ்வு அவலமாகிப் போனது.





தூங்க முடியாத வேதனையில் இரண்டு வருடங்களுக்குப் பிறகு கணிதம், இயற்பியல், உயிரியல் என்று பல துறைகளில் பல முடிக்கப்படாத சித்தாந்தங்களை உலகிற்கு விட்டுவிட்டு சயனைட்டுக்குப் பலியாகி அவர் உயிர் துறந்தார். எந்த பிரிட்டானிய சமூகத்தை தன்னுடைய அறிவால் போரில் காப்பாற்றினாரோ அதே சமூகத்தின் ஓரினச்சேர்க்கை வெறுப்புணர்வினால் துரத்தியடிக்கப்பட்டு அவருடைய வாழ்வு முடிந்துபோனது.

அவருடைய ஆராய்ச்சிகள், கணிதம், இயற்பியல், தர்க்கம், தத்துவம், உயிரியல், சங்கேதம் என்று பல துறைகளில் பரவி நிற்கிறது. அவருடைய மறைவிற்குப் பிறகு 1969இல் வெளியிடப்பட்ட புத்திசாலி இயந்திரங்கள் (Intelligent Machines) என்ற ஆராய்ச்சிக் கட்டுரை, இன்றைக்கு நாம் அறியும் செயற்கை ஒட்பம் (Artificial Intelligence) என்ற துறைக்கு வித்திட்டது. மனித மூளையின் செயற்பாடுகளை முற்றாகவோ, கிட்டத்தட்ட முழுமையாகவோ நிகழ்த்தவல்ல இயந்திரங்களைப் படைப்பது சாத்தியமே என்று டூரிங் முழுமையாக நம்பினார். அத்தகைய புத்திசாலி இயந்திரங்களை உளவியல் ரீதியாக கைக்கொள்வதற்கு மனிதனுக்கு இருக்கும் தயக்கங்களையும் அவர் முன்மொழிந்தார். நவீன கண்டு பிடிப்புக்களான புகைப்படக் காமெரா, ஒலிவாங்கி போன்றவை மனிதனின் கண்களையும் காதுகளையும் தனித்துச் செயல்படுத்துகின்றன என்றார் அவர். இத்தகைய சாதனங்கள் புத்திசாலி இயந்திரத்தின் பாகங்கள் என்று அடையாளம் கண்டார்.1950இல் டூரிங் சோதனை (Turing Test) என்றொரு கட்டுரையை வெளியிட்டார். அதில் செயற்கை ஒட்பத்தை அடையாளம் காணும் வழியை விளக்கியிருந்தார். ஒரே விதமான கேள்வியை மனிதன், இயந்திரம் இரண்டிற்கும் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு கிடைக்கும் விடையில் மனிதன், இயந்திரம் இரண்டுக்கும் வித்தியாசம் இருக்காது என்பதை அந்தக் கட்டுரையில் நிறுவியிருந்தார். இந்த டூரிங் சோதனை பின்னாளில் செயற்கை ஒட்பத்தின் தர நிர்ணயமாக அங்கீகரிக்கப்பட்டது. மனிதனின் உறுப்புக்களை இயந்திரங்களுக்கு ஒப்பிட்டது, இயந்திரங்கள் புத்திசாலிகளாக இருக்கும் என்பதை முதன்மைப்படுத்தியது. இவற்றுடன் கூட அன்றைய சமூகநெறிகளுக்கு ஒத்துப்போகாத அவருடைய ஓரினச்சேர்க்கை ஆர்வம் எல்லாமுமாக அவர் ஒரு கலகக்காரர் என்று அடையாளம் காணப்பட்டார். சிக்கலான, தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வின் இடையே மனிதனின் அறிவியல் ரீதியான புரிதல்களை வெகுவாக முன்னெடுத்துச் சென்று நவீன இரண்டடிமான கணினி, செயற்கை ஒட்பம், சங்கேதவியல், போன்ற துறைகளை நமக்கு உருவாக்கிக் கொடுத்தவர் அலன்.

மேலதிக தகவல்களுக்கு:
**http://www.turing.org.uk**



## தமிழ் தகவல் தொழில்நுட்பம்

# கணினியிலே இனிய தமிழ்


த. தவரூபன்-

நாம் கணினியில் தட்டச்சு செய்யும் போதும் உள்ளீடுகளை வழங்கும் போதும் எழுத்துருக்கள் அதாவது ஃபொன்ட்களை (Font) உபயோகிக்கின்றோம். ஒவ்வொரு மொழியிலும் பல வடிவங்களில் இந்த எழுத்துருக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக தமிழில் பாமினி, நல்லூர், சிந்து பைரவி, நாகநந்தினி, ஆனந்தபைரவி, அடங்காப்பிடாரி என நூற்றுக்கணக்கான வடிவங்களில் எழுத்துருக்கள் காணப்படுகின்றன. இந்த எழுத்துருக்களின் உதவியினால்தான் பல புத்தகங்கள், இணையத்தளங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

அனைத்துப் பயனாளர்களும் தமது கணினியையோ இணையத்தளத்தினையோ உபயோகிக்கும் போது தமது மொழியில் அறிவுறுத்தல்கள் உள்ளடக்கங்கள் இருக்கும் போது மகிழ்ச்சியடைவார்கள். எனவே, கணினியின் எழுத்துக்கள் எவ்வாறு சேமிக்கப்படுகின்றன அல்லது கையாளப்படுகின்றன என்ற விடயத்துக்கு அழைத்துச் செல்கின்றேன்.

உண்மையில், விசைப்பலகையில் (Key Board) விசைகளை அழுத்தும் போது குறித்த விசைக்குரிய எழுத்து நேரடியாக கணினியில் உள்ளிடப்படாது. மாறாக அந்த விசைக்குரிய ASCII இலக்கம் தான் உள்ளிடப்படும். அது அவ்வேளை உபயோகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் எழுத்துரு வகைக்கு ஏற்ப திரையில் வடிவம் பெறுகிறது.

ஆங்கில எழுத்துரு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் கணத்தில் ‘A’ என்ற விசையினை அழுத்தின் 97 என்ற ASCII பெறுமானமே இரட்டை அடி எண்ணாக (Binary) கணினிக்கு வழங்கப்படும்.




அது திரையினூடாக ‘A’ யாகத் தெரியும். பாமினி என்ற தமிழ் எழுத்துரு தெரிவுசெய்யப்பட்டிருப்பின் ‘ய’ என்று தெரியும். இவ்வாறு எமக்குத் திரையில் தெரிகின்ற வடிவம் தெரிவுசெய்யப்பட்ட எழுத்துருவிற் கேற்ப ஒவ்வொரு வடிவில் தெரிந்ததே தவிர, அதனுடைய உண்மைப் பெறுமானம் 97 மட்டுமே.

விசைப்பலகையில் உள்ள ஒவ்வொரு விசைக்கும் ஒவ்வொரு ASCII பெறுமானம் உண்டு. இந்த நிலையில் WELCOME என்ற சொல் தட்டச்சு செய்யப்பட்டிருக்கின்றதாயின் அது ஆங்கில எழுத்துரு தெரிவுசெய்யப்பட்டிருக்கும் வரையில் மட்டுமே அவ்வாறு தெரியும். அதனை தமிழ் எழுத்துருவிற்கு மாற்றிவிட்டோம் எனில் அது ‘றநுஉழஆநு’ என்று தெரியும். இவ்வாறு தமிழ் எழுத்துரு தெரிவு செய்யப்பட்டிருக்கையில் “வணக்கம்” என தட்டச்சு செய்யப்பட்ட சொல் ஆங்கில எழுத்துரு ஒன்றிற்கு மாற்றும் போது ‘tzf;fk;’ எனத் தெரியும்

ஆகவே, குறித்த எழுத்துருவைத் தெரிவுசெய்து தட்டச்சு செய்தவற்றை, அதே எழுத்துருவோ அல்லது அது சார்ந்த எழுத்துருவோ தெரிவுசெய்யப்பட்டால் மாத்திரமே விளங்கிக் கொள்ளமுடியும். நாம் பாமினி என்ற தமிழ் எழுத்துரு கொண்டு தட்டச்சு செய்ததை பாமினி எழுத்துருவோ அன்றி அது சார்ந்த வேறு ஒரு தமிழ் எழுத்துருவோ இன்றி வாசிக்க முடியாது. இதனால், ஒரு குறிப்பிட்ட எழுத்துருவில் தட்டச்சு செய்த விடயத்தை ஒருவர் வாசித்தறிய வேண்டுமானால், கட்டாயம் அந்த எழுத்துருவை, அல்லது அதுசார்ந்த எழுத்துருவைக் கொண்டிருக்க வேண்டும். இது சில காலங்களுக்கு முன்னர் பெரும் பிரச்சனையாகத்தான் இருந்தது. இப்போது அதற்கு தீர்வு கிடைத்து விட்டது. அதுதான் ‘யுனிகோட்’ எழுத்துரு.

இந்த யுனிக்கோட் எழுத்துரு சம்பந்தமான பொதுவான முடிவுகள் யாவும் யுனிக்கோட் கொன்சட்டேறியம் என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் அங்கீகரிக்கப்படும் விதி முறைகளை மென்பொருள் மற்றும் கணினி நிறுவனங்கள் ஏற்றுக் கொள்கின்றன. A-Z, a-z ஆகிய ஒவ்வொரு எழுத்துக்களுக்களுக்கும் இருந்தது போன்று ஒவ்வொரு மொழியில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் ASCII இலக்கங்கள் இவர்களினால் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. அதற்காக ஒரு மொழியில் உள்ள எல்லா எழுத்துக்களுக்கும் முற்று முழுதாக இலக்கங்கள் வழங்கிவிட முடியாது. அதற்கு சில யுத்திகள் கையாளப்படுகின்றன. அதாவது தமிழில் உள்ளதுபோல் விசிறி எழுத்துக்களுக்காக குறித்த எழுத்துடன் விசிறியை சேர்த்து விசிறி எழுத்தை பெற்றுக்கொள்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ( g + p = gp )


தமிழ் மொழிக்கென இவ்வமைப்பினால் 2946 தொடக்கம் 3071 வரையிலான இலக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான பரிந்துரைகளை உத்தமம் (INFITT), தமிழ்நாடு அரசு என்பன வழங்கிவருகின்றன. தமிழ் மொழி எழுத்துக்களுக்கென கிடைத்தது மாதிரி சிங்கள மொழிக்கும் அவர்களின் எழுத்துகளுக்கென 400 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான இட ஒதுக்கீட்டில் எமது தமிழ் மொழிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் போதாது என்ற சாரப்பட சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது நிற்க, இன்று உலகளாவிய ரீதியில் அநேக மொழிகளின் எழுத்துக்களுக்கு இடங்கள் ஒதுக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு ஒரே பிரச்சனை, எல்லா மொழிகளின் எழுத்துருக்களுக்கும் இடம் ஒதுக்கப்படும் போது எழுத்துருவின் கொள்ளளவு அதிகரிக்கப்பட வாய்ப்புண்டு என்பதாகும்.

விசைப்பலகையில் 2946 என்ற இலக்கப்பெறுமதி உடைய விசை அழுத்தப்பட்டிருப்பின் அதற்குரிய எழுத்து வடிவம் மாத்திரமே திரையில் தெரியும். ஆங்கில யுனிகோட் எழுத்துருவாக இருந்தால் என்ன தமிழ் யுனிகோட் எழுத்துருவாக இருந்தால் என்ன குறித்த இலக்கத்துக்கு என்ன எழுத்து வடிவம் இருக்கின்றதோ அதுவே திரையில் தெரியும்.


முன்பெல்லாம் தமிழ் எழுத்துருவில் 65 என்ற இலக்கப் பெறுமதியில் a என்ற எழுத்து இருந்தது. ஆங்கில எழுத்துருவில் 'A' என்ற எழுத்து இருந்தது. ஆனால் இப்போது எல்லா யுனிகோட் எழுத்துருக்களிலும் குறித்த இடத்தில் 'A' இருக்கும். 2949 என்ற இடத்தில் 'அ' என்பதே இருக்கும். வெவ்வேறு யுனிகோட் எழுத்துருக்களில் அவற்றின் எழுத்துக்கள் கொண்டுள்ள வடிவம் (Style) மாறி இருக்குமே தவிர, குறித்த இலக்கத்துக்கான எழுத்து மாறியிராது. இந்நிலையில் 'Hello அம்மா' என்பதை நாம் யுனி கோட் எழுத்துரு மூலமாக தட்டச்சு செய்து இணையத் தளத்தில் (வெப்சைட்டில்) போட்டிருந்தால் குறித்த யுனிக் கோட் எழுத்துரு கணினியில் இல்லாவிட்டாலும் வேறு ஒரு யுனிக் கோட் எழுத்துரு மூலமாக நாம் அதனை இலகுவாக வாசிக்கக் கூடியதாக இருக்கும்.

முன்பு எழுத்துருவை மாற்றும் போது எல்லாம் ஒவ்வொரு சொல்லுக்கும் அவை கொண்டுள்ள எழுத்துருக்களுக்கு ஏற்ப தனித் தனியாக மாற்ற வேண்டியிருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. தானாகவே எல்லாம் தனியாகத் தெரியும். அப்படியானால்Hello அம்மாவிற்கு என்னென்ன விசைகள் அழுத்தப்பட்டிருக்கக் கூடும்?. 72, 101, 108, 108, 111, 2949, 2990, 3021, 2990, 3006 என்பனதாம்.

சரி, இப்படி யுனிக்கோட்டில் உள்ளிட்டால் தெரியும். எப்படி உள்ளிடுவது? சாதாரணமாக விசைப்பலகையில் சுமார் 105 விசைகள் இருக்கும். இங்கே 2949 இனை எங்கே தேடுவது? இதற்கு வழி சொல்ல விசைப்பலகை கட்டுப்படுத்தல் மென் பொருள்கள் (Software) உள்ளன. அவை விசைகளை விரும்பியவாறு குறித்த எண்ணில் இருந்து குறித்த எண் வரையிலான வையாக மாற்ற வழி வகுக்கும். அவற்றைக் கணினியில் நிறுவினால் 2946 தொடக்கம் 3071 வரையிலானதமிழ் எழுத்துகளுக்குரிய எண் பெறுமானங்களை விரும்பிய வேளையில் கொடுக்கமுடியும். அத்துடன், நீங்கள் விரும்பிய விசைப்பலகை வடிவமைப்புக்கும் (Layout) அதனை மாற்றிக்கொள்ள முடியும். அதாவது, பாமினி அல்லது Tamil99 ஒழுங்கில் உங்கள் விசைகளை மாற்ற முடியும். பின்னர் தட்டச்சு செய் தால் அவை யுனிகோட் எழுத்துக் களாகத் திரையில் தெரியும்.



இந்த யுனிகோட் எழுத்துருக் களுக்கு Windows 98/95/me ஆகியன ஒத்திசைவாக்கம் பெறுவதில் சில சிக்கல்கள் உள்ளன. எனினும், இதற்கும் தீர்வுகள் உள்ளன. ஆயினும், பின்னர் வந்த அநேக இயங்கு தளங்கள் (ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள்) இந்த யுனிக்கோட் எழுத்துருவுக்கு ஒத்திசை வாக்கம் பெற்றிருக்கின்றன. Microsoft நிறுவனத்தினர் தமது புதிய வின்டோஸ் XP, வின்டோஸ்2000




களில் லதா என்ற தமிழ் யுனிகோட் எழுத்துருவை சேர்த்துவருகின்றனர்.

எது எப்படியாயிருந்தபோதும் எமது கணினிகளில் யுனிகோட் வாசிப் பதற்கு என பிரத்தியேகமான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் யுனிகோட் எழுத்துக்கள் பெட்டி பெட்டி எழுத்துக்களாக தெரிவதற்கு வாய்ப்புண்டு. இதற்கு Windows XP இல் செய்யவேண்டிய ஏற்பாட்டை இங்கு தருகிறேன்.

Control panel இற்குள் சென்று Regional and Language Option இன்மீது இரட்டை சொடுக்கல் செய்து, அதன்போது தோன்றும் சாளரத்தின் Language என்ற Tab இனை சொடுக்கி அங்கு Install files for Complex script and right - to- Left - Language (including Thai) என்பது தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றதா என அவதானிக்க வேண்டும். இல்லையெனில் அதனைத் தெரிவு செய்து OK என அழுத்தினால் வின்டோஸ் சீடியினைத் தருமாறு கணினி கேட்கும். நீங்கள் அதனை CD ROM ல் இட்டுவிட தேவையான மாற்றங்கள் நடைபெற்று Restart ஆகும். இப்போது உங்கள் கணினி யுனிக்கோட்டுக்கு ரெடியாகி விட்டது.

இன்னும் ஒரு முக்கிய விடயம். விசைப்பலகையில் உள்ளிடும் போதே யுனிக்கோட் எழுத்துருக்களாக தட்டச்சு செய்வதுபற்றி பார்த்தோம். எனினும் அவ்வாறு செய்யாமல் சாதாரணமான எழுத்துருவில் தட்டச்சு செய்து பெற்றதையோ அன்றி வேறு எழுத்துருக்களில் வடிவமைக்கப்பட்ட இணையத்தளங்களில் இருந்து பெற்றவற்றையோ சில 'மாற்றிகள்' (Converters) கொண்டு யுனிகோட்டிற்கு மாற்றமுடியும்.

இந்த மாற்றிகளை நாம் www. jaffnalibrary.com/tools மற்றும் www.suratha.com போன்ற இணையத் தளங்களில் பெற்று அதனை சேமித்து வைத்து இணைய தொடுப்பின்றியே மாற்றிக்கொள்ள முடியும். இதற்கு Murasu.com இல் பெற்றுக்கொள்ளக் கூடிய முரசு அஞ்சல் மென்பொருளையும் உபயோகப்படுத்தலாம்.

யுனிகோட் சம்பந்தமான மென்பொருள்கள், மாற்றிகள், எழுத்துருக்கள் பற்றியும், அவற்றின் உபயோகம் பற்றியும் இன்னொரு கட்டுரையில் ஆராய்வோம்!




# வன்தட்டு

## (Hard Disk)

## வேக எல்லை!


கணினியின் வன்தட்டில் தகவல்களைப் பதியக்கூடிய அதிகூடிய வேகத்தினை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். வன்தகடுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அதே மூலகத்தின் (Material) மாதிரியினூடாக இலத்திரன்களை ஒளியின் வேகத்திற்கு அண்மித்த வேகத்தில் செலுத்தியதன் மூலம் இந்தவேக எல்லையினை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இக்கண்டுபிடிப்பானது வன்தட்டு உற்பத்தியாளர்கள் வன்தட்டு உற்பத்திக்கு வேறு விசேட மூலகங்களைப் பயன்படுத்த அல்லது புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இந்த வேகத்தை அதிகரிப்பதற்கு வழிசெய்யும் என நம்பலாம்.

சாதாரணமாக வன்தகடுகளில் தகவலானது பிளற்றர்ஸ் எனப்படுகின்ற தட்டுக்களில் எதிர்க்காந்த விளைவினை உபயோகித்து 0,1 இனை பிரதிநிதிப்படுத்தி இருமை தகவல்களாக(Binary Information) பதிவுசெய்யப்படுகின்றன.

கலிபோர்னியாவின் ஸ்ரான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களினால் நேர்கோட்டு ஆர்முடுக்கியினை உபயோகித்து 2.3 பைக்கோ விநாடிகளில் காந்தப்புலத் துடிப்புக்களை வன்தட்டு மாதிரி மூலகத்தில் (Sample Material) ஏற்படுத்த முடிந்திருக்கின்றது. இதனை எமது பாணியில் சொல்வதானால், தற்போதைய வன்தட்டு ஒன்றில் தகவலைப் பதிவு செய்யத் தேவையான மிகவும் குறுகிய நேரம் 2.3 பிக்கோ வினாடிகள் என கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

# கணினி இணைய ஆண்டுகள்




–கணனிக் கிறுக்கன்

10,000 ஆண்டுகளுக்கு முன் : தகவல்யுகம் இவ்வுலகில் அவதரித்த காலம்

கி.மு 3000 : எகிப்திய நாட்டவர் நாட்டின் முக்கிய இரகசியங்களை காகிதத்தில் பதித்து (Save) பாதுகாக்கத் தொடங்கினர்.

கி.மு. 1700 : பொனீசியர்கள் 22 எழுத்துக்களைக் கொண்ட அரிச்சுவடியைப் பயன்படுத்தினர்.

கி.மு. 1000 : இன்றுவரை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் மணிச்சட்டம் புழக்கத்துக்கு வந்த காலம்.

கி.பி. 1642 : பாஸ்களின் கணக்கிடும் பொறி கண்டுபிடிக்கப்பட்டது.

கி.பி. 1833 : சாள்ஸ்பபேஸ் என்பவர் Analytical எனும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

1924 : IBM நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

1930 : புஷ் என்பவர் அனலாக் என்ற பெயருடைய கணக்கிடும் கருவி ஒன்றை உருவாக்கினார்.

1944 : ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தினர் Mark 1 எனும் மின்சாரத்தினால் இயங்கக் கூடிய இலத்திரனியல் கணினியொன்றை உருவாக்கினார்.

1946 : முதல் தானியங்கி மின்னணு எண்ணியல் கணினி உருவாக்கப்பட்டது. இது ENIAC என அழைக்கப்பட்டது.

1947-1972 : Transistor கண்டுபிடிக்கப்பட்டது.

1951 : Univac 1 எனும் வர்த்தக தகவல்களை ஆராயும் கணினி உருவாக்கப்பட்டது.

1969 : இணையம் தோன்றுவதற்கு காரணமாக இருந்த Net Work வலைப் பின்னல் தொழில்நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டது.

1970 : Floppy Disk, 4004 சிப் விற்பனைக்கு வந்தது.

1971 : சிறியரக கணினி கருவி உருவாக்கப்பட்டது.

1974 : தொலைநகல் கண்டுபிடிக்கப்பட்டது.

1975 : தனிநபர் மற்றும் சூப்பர் கணினிகள் தயாரிக்கப்பட்டன.

1976 : LAN என்பது Ethernet எனும் பெயரில் அறிமுகமானது.

1982 : Compact dis'c வெளியிடப்பட்டது.

1983 : செல்போன் கண்டுபிடிக்கப்பட்டது.

1985 : Apple macintosh வகைக் கணினிகளின் விலை பாரிய அளவில் குறைக்கப்பட்டது.

1990 : சுவிற்ஸர்லாந்தில் World Wide Web உருவாக்கப்பட்டது.

1993 : Pentium வகை பராசஸர்கள் (Processor, வெளியிடப்பட்டது.

1994 : Navigator ஆணைத் தொடர் உருவாக்கப்பட்டது.


1995 : Pentium MS Windows 95க்கு விற்பனைக்கு வந்தது.

1996 : MS Explorer அறிமுகமானது

1997 : சூப்பர் கணினிகள் உருவாக்கப்பட்டது.

1999 : PIII, PC, 500 MHz வகைக் கணினிகள் விற்பனைக்கு விடப்பட்டன.

# மைக்ரோசொப்ட் வேர்ட்



From
R. A. Saravanan
36, Sea Street,
Batticaloa.

To

The Manager
Wijeya Newspapers Ltd
No.8,Hunupitiya Cross Road,
Colombo 2.

10.04.2006

Kind Attention: Mr. Nanayakara


Sir,
Sub: Requesting PC Times for sale

I request you to kindly send me the Tamil PC Times to the address given above for sales. We found a good demand for the magazine and we hope we can sell more than 500copies monthly. Therefore, please make arrangement to send it monthly without any failure. I will make the payment in advance every month.

Thank You,
Yours Faithfully,

(R. A. Saravanan)

மேற்காணும் கடிதம் பார்ப்பதற்கு அழகில்லாமல் ஒரு சாதாரண கடிதமாக காணப்படுகிறது. இதை Formatting Tool Bar மூலம் Format செய்து அழகாக மாற்றி அமைக்கலாம்.




மேற்கண்ட கடிதம் Time New Roman 10 புள்ளிகளைக் கொண்டுள்ளது. இந்தக் கடிதத்தை Tahoma ஸ்டைலில் 11 புள்ளிகளாக மாற்ற நினைக்கிறீர்கள்.

இப்படிச் செய்ய முதலில் கடிதத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் Mouse pointer ஐ வைத்து Ctrl + A ஐ அழுத்தினால் கடிதம் முழுவதும் பிரகாசப்படுத்தப்படும் (highlight). பின்னர் Formatting Toolbarல் உள்ள Font Dropdown List ல் Tahoma Font ஐத் தெரிவு செய்து அதன் அருகில் இருக்கும் புள்ளிகளில் (Points -Font size) இருந்து 11ஐ தேர்வு செய்யுங்கள். இப்போது கடிதம் முழுவதும் புதிய Font Size இக்கு மாற்றம் பெறும்.

மேற்கண்ட கடிதம் முழுவதும் இடது பக்கமாக ஒழுங்கு செய்யப்பட்டு (Left Align) தட்டச்சு செய்யப்பட்டு இருக்கிறது. இவற்றில் Sub: Requesting PC Times for sale என்பதை கடிதத்தின் தலைப்பாக மத்தியில் (Center) கொண்டு வரவேண்டும். இதைச் செய்ய முதலில் இந்த வரியை பிரகாசப்படுத்தி (high light) பின்னர் Tool bar இல் உள்ள Center எனும் பொத்தானை அழுத்தினால் நீங்கள் செய்த பகுதி Center செய்யப்படும்.

அடுத்ததாக Kind Attention: Mr. Nanayakara என்பதை கடிதத்தின் வலது பக்கத்திற்கு கொண்டுவரவேண்டும் என்றால், அதை பிரகாசப்படுத்திக் (highlight) கொண்டு Align Right (வலப்பக்கமாக ஒழுங்கு செய்) பொத்தானை அழுத்துங்கள். நீங்கள் தேர்வு செய்தது கடிதத்தின் வலது பக்கத்திற்கு வரும்.




# Microsoft® Word


R.R.Jeyakeshan

இப்போது Wijeya Newspapers Ltd என்பதை Bold ஆக ஆக்கவேண்டும் என்றால், அதை பிரகாசப்படுத்திக் (highlight) கொண்டு பின்னர் Tool bar இல் உள்ள B என்பதை கிளிக் செய்தால் அவை Bold ஆக மாறும்.

Kind Attention: Mr. Nanayakara என்பதை சரிந்த (Italic) எழுத்தாக மாற்றவேண்டும் எனின், அதை பிரகாசப்படுத்திக் (highlight) கொண்டு Tool bar உள்ள I என்பதை கிளிக் செய்தால் அவை Italic ஆக மாறும்.

Batticaloa என்பதையும், Colombo-2 என்பதையும் அடிக் கோடிட வேண்டுமெனில் அவற்றை பிரகாசப் படுத்திக் (highlight) கொண்டு Tool bar உள்ள U என்பதை கிளிக் செய்யுங்கள். நீங்கள் தேர்வு செய்தவை அடிக்கோடிடப்படும்.








பந்தியை ஒழுங்கமைக்க (Justify) அதை பிரகாசப் படுத்திக் (highlight) கொண்டு Justify பட்டனை அழுத்துங்கள். பந்திகளின் முதல் வரிகள் சற்று இடை வெளிவிட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்கு பந்தியின் முதல் எழுத்தின் முன் cursorஐ வைத்து விட்டு Tab Key ஐ தட்டினால் பந்தியின் முதல் வரி சற்று இடை வெளி விட்டு ஆரம்பிக்கும்.

பந்திகள் ஒருவரி இடைவெளியில் காணப்படுகிறது. இவற்றை இரண்டு வரி இடைவெளிக்கு மாற்ற அவற்றை முதலில் பிரகாசப்படுத்திக் (highlight) கொண்டு Tool bar ல் உள்ள Line Spacing (1) எனும் பொத்தானை கிளிக் செய்தால் ஒரு பட்டியல் (List) வரும். இதில் 2.0 என்பதை கிளிக் செய்தால் கடிதம் இரண்டு வரி இடைவெளிக்கு மாற்றப்படும்.

கடைசியில் Sub: Requesting PC Times for sale என்பதை அடிக்கோடிட அதை பிரகாசப் படுத்திக் (highlight) கொண்டு பின்னர் U எனும் பட்டனை கிளிக் செய்யுங்கள். இப்போது பாருங்கள். கடிதம் பார்ப்பதற்கு ஒரு ஒழுங்கான வடிவத்துக்கு வந்து விட்ட தல்லவா?






**குளோனிங்.** இதுபற்றி நீங்கள் பல செய்திகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மனிதனை செயற்கையாக குளோனிங் முறை மூலம் உருவாக்கல் அல்லது பிரதி பண்ணல் பற்றித்தான் கூறுகின்றேன். முன்னர் மிருகங்களில் நடைபெற்ற குளோனிங் ஆராய்ச்சிகள் இன்று மனிதர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பது உண்மையே.


ஆனால், இந்த முயற்சி பல தரப்பினராலும் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. இதற்கும் எமக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நெற்றி சுருக்குவது தெரிகின்றது.

உயினங்களில் குளோனிங் செய்வது தவறு என்று கட்டுப் படுத்தலாம். ஆனால், புகைப்படங்களில் குளோனிங்கை எவரும் தடைசெய்ய முடியாதல்லவா? அதனால் நாம் குளோனிங்கினை படங்களிலாவது செய்து பார்ப்போமே. இதற்கு பல மென் பொருள்கள் இருக்கின்றன. அவற்றில் தற்போது பலரிடத்தும் பிரபல்யம் பெற்றிருக்கின்ற மென் பொருள் தான் **Adobe Photoshop.**

# Photoshop புதுமைகள்




படம் 3




புகைப்படங்களில் பல புதுமைகளை மேற்கொள்ள வும் மேம்படுத்தவும் இந்த Photoshop பெரிதும் பயன் படுத்தப்படுகின்றது.


இந்த Photoshop மென்பொருளைப் பயன்படுத்தி ஒருவரின் அல்லது ஒரு படத்தின் உருவமைப்பை இன்னுமொருவரின் அல்லது இன்னுமொரு படத் தின் உருவமைப்புடன் கலப்பது அல்லது ஒத்திசை வாக்கு வது எப்படி என்று பார்ப்போம். குறிப்பாக Photoshop இலுள்ள Cloning Tool பற்றி சிறிது பார்ப்போம்.

இரண்டு பேருடைய புகைப்படங்களை Photoshop ஊடாக திறவுங்கள். குறித்த இரண்டு பேருடைய புகைப்படங்களும் கிட்டத்தட்ட ஒரே பரிமாணத் தில் இருப்பது அவசியம். ஒருவரின் முகத்துடன் இன்னுமொருவரின் முகம் ஓரளவுக்கேனும் பொருந்தக் கூடிய அளவில் இருக்கவேண்டும். படம் ஒன்றில் உள்ளவருக்கு மீசை இல்லை என வைத்துக்கொள்வோம். இரண்டாமவரின் மீசையினை இவருக்கு வரச் செய்ய வேண்டுமாயின் மீசை முதலாவருடைய முகத்துக்குப் பொருந்தக்கூடிய அளவில் இருக்க வேண்டியது அவசியம்.

முதலில் பிரதிபண்ண வேண்டியவரின் படத்தைத் தெரிவு செய்யவேண்டும். பின்னர் Cloning Tool (படம்-1) ஐ கிளிக் செய்து பின்னர் Alt விசையினை அழுத்திய வண்ணம் தெரிவுசெய்த படத்தில் உள்ள மீசைப்பகுதியில் கிளிக் செய்யவேண்டும். அவ்வேளை Mouse இனது குறி படத்தில் உள்ளவாறு (படம்-2) மாறும். பின்னர் மீசையில்லாத நபரின் படத்தில் Title Bar இல் கிளிக் செய்வதன் மூலம் அந்தப் படத்தைத் தெரிவுசெய்து மீசை இல்லாத (வைக்கப்பட வேண்டிய இடம்) பகுதி மீது கிளிக் செய்யவேண்டும். இவ்வேளை களில் எல்லாம் Mouseஇன் குறி 0 ஆக இருக்கும். மீசை வைக்கவேண்டிய இடத் தில் கிளிக் செய்யும் ஒவ்வொரு தடவை யும் மீசை பிரதி செய்யப்பட்ட நபரின் படத்தில் குறித்த மீசைப் பகுதியில் படத் தில் உள்ளவாறு + குறி தோன்றும். இது மீசையுள்ள படத்தில் எந்தப் பகுதி மீசை யில்லாத நபரின் பகுதி மீது குளோனிங் செய்யப்படுகின்றது என்பதை சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

படம் 1



படம் 2

மேலும், இங்கு மீசை வைக்கும் ஒவ்வொரு சமயத்திலும் குளோனிங் செய்யப்படும் பகுதியின் அளவை மவுசின் வட்டக் குறியீட்டின் அளவு தான் தீர்மானிக்கின்றது. இந்த வட்டத்தின் அளவை நாம் மாற்றிக்கொள்ளலாம். அதற்கு Photoshop பிரதான சாளரத்தின் Tool bar (படம்3) இல் காணப்படும் Brush என்பதற்குப் பக்கத்தில் உள்ள பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் மாற்றலாம். இந்த Brush இனது வடிவத்தையும் அந்தப் பகுதியில் மாற்றிக் கொள்ளலாம்.

இந்த குளோனிங் Tool இன் உதவியால் வெறுமனே மீசை போன்ற இல்லாத ஒன்றை இன்னும் ஒருவருக்கு பொருத்தவும், மொட்டையான ஒருவருக்கு தலைமயிர் உருவாக்கவும் (இன்னும் ஒருவரின் படத்தில் இருந்து எடுத்து) மட்டுமன்றி, மேலும் பல ஒத்த விளையாட்டுக் களை உருவாக்க முடியும்.

குறித்த ஒரு படத்தில் ஒரு சிறு பூ ஒள்று காணப் படுகின்றதெனில் அந்தப் பூவைப் போல் பல பூக்களை ஒரு பகுதியில் உருவாக்க இந்த குளோனிங் Tool ஐ



நா
ன்
யார்?

# குளோனிங் செய்வது எப்படி?

என்னைத்
தெரிகிறதா?



மேற்சொன்ன முறையில் கிளிக் செய்து பலமுறை குளோனிங் செய்வதன்மூலம் பெற முடியும்.

மேலும் பிழையாக குளோனிங் செய்து விட்டால் Undo செய்வதன் மூலம் அவற்றை நீக்கலாம். இதற்குரிய Short cut, Ctr+Alt+Z ஆகும். இது பல படிகள் முன்னுக்குச் செல்ல உதவும்.


ஒருவரின் நிறத்தை இன்னுமொருவருக்கு வரச்செய்வதற்கும் இந்த Toolஇனைப் பயன்படுத்தலாம். இதற்கு மிகத் துல்லியமான முறையில் நிறம் எடுக்க வேண்டியவரின் படத்தில் குளோனிங் Tool மூலம் கிளிக் செய்து பின்னர் நிறம் மாற்றப்பட வேண்டியவரின் படத்தில் குறித்த பிரதேசத்தில் கிளிக் செய்யவேண்டும்.

குளோனிங் செய்வதற்கான பொதுவான முறை Alt விசையை அழுத்திய வண்ணம் பிரதி செய்யவேண்டிய இடத்தில் Click செய்த பின்னர் குறித்த குளோனிங் செய்யப்பட்ட பிரதி பிரயோகிக்கப்பட வேண்டிய இடத்தில் சாதாரணமாக கிளிக் செய்தல் ஆகும். எது எப்படியிருப்பினும் இங்கு துல்லியம் தான் முக்கியத்துவம் பெறுகின்றது. சில படங்களைக் குளோனிங் முறையில் மாற்ற பல மணித்தியாலங்கள் கூட செலவழிக்க வேண்டியிருக்கும்.

இக் கட்டுரை ஓரளவுக்கேனும் Photo shop இனைப் பயன்படுத்தி படங்கள் குளோனிங் செய்ய உங்களை தயார்படுத்தும் என நம்புகின்றேன். முயன்று பார்த்து தெரியப்படுத்துங்களேன்.


தவா
நன்றி - கம்ப்யூட்டர் ஃபோக்கஸ்

# மைக்ரோசொப்ட் எக்ஸெல்





எக்ஸெலில் திறக்கப்பட்ட புதிய பக்கமானது Work Sheet என அழைக்கப்படுகிறது. இதில் காணப்படும் கட்டங்களில் ஒரு கட்டம் அல்லது பெட்டி செல் (Cell) என அழைக்கப்படுகிறது. இங்கு காட்டப்பட்டுள்ள Work Sheet இல் காணப்படும் செல்லினுள்ளேயே இலக்கங்களை தட்டச்சு செய்வதன் மூலம் எமக்குத் தேவையான வகையில் அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். அத்துடன் கணக்கியல் சமன்பாடுகளின் மூலம் எமக்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதற்கேற்ற வகையில் கணக்கியல் சமன்பாடுகளையும் இலகுவாக உட்புகுத்தி தன்னிச்சையாகவே அச் செய்கைகளைச் செய்து எமக்குத் தேவையான தரவை மட்டும் தரும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தை (Programming) வடிவமைக்கலாம். இதற்காக பல இலகு கட்டளை (Command) குறியீடுகள் Main Menu





மற்றும் Standard Tool Bar ஆகியவற்றில் தரப் பட்டுள்ளது. எமக்குத் தேவையான சமன்பாடுகளை உட்புகுத்திக் கொள்வதற்காக Formula Tool Bar ல் கட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.




Formula Tool Bar இன் இடது பக்க மூலையில் காட்டப்படுவது Cell Address எனப்படும். உதாரணமாக படத்தில் காட்டப்பட்டுள்ள Cell ன் Address ஆனது A1 என குறிப் பிடப்பட்டுள்ளது. ஏனெனில் இச் செல்லானது A Column த்தில் முதலாவது Row வில் உள்ளது. இவ் வாறே Column எழுத்துடன் Row இலக்கத்தையும் இணைத்தே ஒவ்வொரு செல்லுக்கான Cell Address குறிப்பிடப்படும். இந்த Cell Address இன் தேவையானது கணக்கியல் சமன்பாடுகளை உருவாக்கும்போது அல்லது சில மேலதிக தொழிற் பாடுகளைச் செய்வதற்காக கட்டளையிடும்போது அந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படவேண்டிய பகுதியைக் குறிப்பிட்டுச் சொல்ல மிக அவசியமான தாகும்.

Work Sheet ஆனது *256* Column களையும் அதா வது A,B,C முதல் IV வரையான Column களை இடமிருந்து வலமாக கொண்டுள்ளது. மேலிருந்து கீழாக ஒன்று தொடக்கம் *65536* Row களையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய பக்கத்தைக் கொண் டது.




உதாரணத்துக்கு கீழ் கண்ட தரவுகளை குறிப்பிட்ட Work Sheet ல் தட்டச்சு செய்து சில அடிப்படை கணக்கியல் செயல்களைச் செய்து பார்ப் போம்.


| **திகதி** | **விற்பனை** |
|---|---|
| *23.05.2005* | *50,000.00* |
| *24.05.2005* | *10,000.00* |
| *25.05.2005* | *20,000.00* |
| *26.05.2005* | *25,000.00* |
| *27.05.2005* | *15,000.00* |




# Microsoft Excel 2000

MICROSOFT OFFICE


R.R.Jeyakeshan




ஒரு வர்த்தக நிலையத்தின் ஐந்து நாட்களுக்குரிய நாளாந்த மொத்த விற்பனை விபரங்கள் மேலே தரப்பட்டுள்ளது. இந்தத் தரவைக் கொண்டு அந்த வாரத்துக்கான மொத்த விற்பனை (Total Cells), நாளாந்த சராசரி விற்பனைப் பெறுமதி (Average), மற்றும் அந்த வாரத்துக்கான விற்பனை வரைவு (Graph) என்பவற்றை இலகுவாக கீழ்கண்ட முறையில் செய்து கொள்ளலாம்.




A Column மில் ஒன்றின் கீழ் ஒன்றாக திகதிகளை தட்டச்சு செய்துகொள்ளவும். அதன் அருகில் உள்ள B Column மில் ஒன்றின் கீழ் ஒன்றாக குறிப்பிட்ட திகதிகளுக்கு பொருத்தமான விற்பனைப் பெறுமதிகளைத் தட்டச்சு செய்து கொள்ளவும். பின்னர் இறுதி ஏழாவது Row வில் மொத்தப் பெறுமதியைக் கண்டறிவதற்கான இடத்தை B Column மில் ஒதுக்கிக் கொள்ளலாம்.




மொத்தப் பெறுமதியைப் பெறுவதற்காக Arrow பொத்தான்களின் மூலம் பிரகாசப்படுத்தப்பட்ட (High - lighted) செல்லை குறிப்பிட்ட இடத்தில் நிலை நிறுத்தி Standard Tool Barல் உள்ள Σ அடையாளத்தை mouse ன் மூலம் கிளிக் செய்தால் உங்களுக்கான மொத்தப் பெறுமதி குறிப்பிட்ட செல்லில் பெறப்படும்.




நாளாந்த சராசரிப் பெறுமதியைப் பெற வேண்டுமானால், Σ அடையாளத்தின் அருகிலுள்ள கீழ் நோக்கிய Arrow வை mouse இனால் கிளிக் செய்து பெறப்படும் menuவில் Average ஐ தெரிவு செய்து கிளிக் செய்து சராசரிப் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். விற்பனை விபரத்தைக் காட்டும் வரைபைப் பெற்றுக்கொள்வதற்கு Standard Tool Bar ல் உள்ள Σ அடையாளத்திற்கு வலது புறமாக உள்ள இரண்டாவது வரைபு அடையாளத்தை கிளிக் செய்து அவற்றில் கேட்கப்படும் படிமுறைக்கு ஏற்ப குறிப்பிட்ட தரவுகளை தெரிவு செய்து வழங்கி வரைபை உருவாக்கிக் கொள்ளலாம். அதாவது x அச்சில் திகதிகளையும் y அச்சில் விற்பனைப் பெறுமதியையும் உள்ளடக்கிய வரைபைப் பெற்றுக்கொள்ளலாம்.





மேற்குறிப்பிட்ட உதாரணத்துக்கான செய்முறையானது இம் மென்பொருளை பாவித்து எவ்வகையான வேலைகளை இலகுவில் செய்யலாம் என்பதை காட்டுவதற்காகவே விபரிக்கப்பட்டது. இச் செயன்முறைகளை செய்வதற்கான விரிவான விளக்கத்தை அடுத்த தொடரில் தர எண்ணியுள்ளோம். அத்தோடு, எக்ஸெலில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவும் தனித்துவமான சமன்பாடுகளை Formula Bar மூலம் எவ்வாறு பெற்றுக் கொள்வது போன்ற விடயங்கள் அனைத்தையும் இனிவரும் தொடர்களில் ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

MAIL BOX

**TO SUBMIT**




# வாசகர் திருமுகம்



கணினி பற்றிய சிறிய அறிவைக் கொண்டிருந்த நான் இப்போது ஒரு மின்னஞ்சல் முகவரிக்குச் சொந்தக் காரனாகி விட்டேன். என்னைப் போன்று பலரும் பயனடைய வேண்டும்.

**ஐ. எல். சவியுல்லா,**
குறீக்கொட்டுவ

எத்தனை தடைகள் வந்தாலும், எவ்வளவு சோதனை வந்தாலும் PC Times சஞ்சிகையை நிறுத்திவிட வேண்டாம்

**கோ. ரமேஸ்,**
திருகோணமலை

PC Times மிகவும் சிறப்பாக இருக்கிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை விளங்கக்கூடிய மொழிநடையில் எழுதப்பட்டிருப்பதால் எவரும் வாசித்துப் பயன் பெறமுடிகிறது.

**ஹுஸ்னி ஹெரீப்,**
றக்குவாணை

தமிழ் PC Times இன் பக்கவடிவமைப்பு, உள்ளடக்கப் படும் விடயங்கள் அனைத்தும் அருமையானவை. ஒரு பக்கத்தில் தமிழ் இணையத்தளங்களின் அறிமுகத்தையும் வெளியிட்டால் நன்று.

**ஏ. ஜே. எம். பிறவ்ஸ்,**
சாய்ந்தமருது -08

ஆக்கங்கள் அனைத்துமே சிறப்பாக இருக்கின்றன. New Arrivals ஆச்சரியம் தருகிறது. அவைகளை நாமும் கையாளக்கூடிய காலம் வராதா என்ற ஏக்கம் மனதில் தோன்றுகிறது.

**எம். எஸ். நஜர்கான்,**
கிண்ணியா-02

பாடசாலை மாணவியாகிய எனக்கு 'PC Times' மாதாந்த சஞ்சிகை மிகவும் பயனளிக்கின்றது.

**எம். ஏ. எஸ். கதீஜா,**
அகுறஸ்ஸ

இலங்கை வாழ் தகவல் தொழிநுட்பவியல் தமிழ் மாணவர்களும் ஆர்வலர்களும் இது தொடர்பான விடயங்களை பிறமொழி நூல்களின் தயவின்றி அறிந்து கொள்ள PC Times உதவுகிறது. பாராட்டுக்கள்.

**- கோழியூர் கண்ணன்-**

நவீன யுகத்தில் வாழும் நாம் தகவல் தொழில் நுட்ப வியலைப் பற்றி தொடர்ந்து அறிந்துகொள்ள உதவும் காலத்துக்கு ஏற்ற சஞ்சிகையாக PC Times திகழ்கிறது.

**சீ. கே. ரூபன்,**
கஹட்கஸ்திகிளிய

*01.04.2006* அன்று கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடாத்திய GNU Linux, Free and Open Source Software Seminar பற்றி அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். யாழ்ப்பாணத்திலும் இதனை நடாத்தினால் எமக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

**வீ. வீ. பூர்ணிமா,**
IDM Computer Pvt Ltd, யாழ்ப்பாணம்.

தமிழ் PCTIMES தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

**ஆசிரியர் குறிப்பு**

**என். எம். அனுசன்-பருத்தித்துறை, ஆர். ரமேஸ்-கரவெட்டி, எம். ஐ. எம். நாஸிர்-வெலிகம, எஸ். நிரோசன்-பதுளை, ரி. நிலக்‌ஷன்-மாத்தளை, ஷப்ரீனா தஜுடீன்-உக்குவெல்ல, எம். எஸ். எம். ஜசீல்-புத்தளம், சுலைஸா மதீன்-கண்டி, பாத்திமா நுஷிகா-மாவனல்ல, றஞ்சித் கார்மேகம்- ப்புத்தளை, அஸ்கர் மௌலானா-தெஹிவளை** ஆகியவாசகர்களும் வாழ்த்தும டல்களையும், ஆலோசனைகளையும் எழுதியனுப்பியிருந்தனர்.

வாழ்த்துக்களையும், ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்ட வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். வாசிப்பதுடன் நின்றுவிடாமல், நல்ல முயற்சிகளை பாராட்டி ஊக்குவிக்கவும் வேண்டும் என்று நீங்கள் எடுத்துக் கொண்ட சிரத்தை உற்சாகமளிக்கிறது. தொடர்ந்து பயனுள்ள குறிப்புக்களை எழுதுங்கள்.

**ஆசிரியர்**

# Computer Price Index

| MONITORS | ViewSonic | Philips | Mercury | LG |
|---|---|---|---|---|
| Normal 15" | Rs.9,000 - 10,000 | Rs.9,750-10,000 | Rs.9,750-10,000 | Rs.10,750-11,500 |
| Normal 17" | Rs.13,500-15,000 | Rs.13,000-14,000 | Rs.13,000-15,000 | Rs.14,500-16,500 |
| LCD 15" | Rs.37,550-40,250 | Rs.25,000-30,000 | Rs.22,000-24,000 | |
| LCD 17" | Rs.40,000-50,000 | Rs.40,500-50,000 | Rs.32,000-34,000 | |

| MOUSE PAD |
|---|
| Rs.50.00 |

| RAM DDR | 128MB | 256 MB | 128MB Kingston | 256MB Kingston |
|---|---|---|---|---|
| | Rs.1,900-3,250 | Rs.2,900-4,000 | Rs.1,750-2,250 | Rs.2,600-3,500 |

| HARD DISK (Maxtor) | 40GB(7200rpm) | 80GB(7200rpm) | 120 GB | 200GB(7200rpm) |
|---|---|---|---|---|
| | Rs.5,500-6,000 | Rs.6,000-6,500 | Rs.8,000-9,000 | Rs.12000 -13,000 |

| SOUND CARD | Eagle | Vibra 128 bit | Creative 5.1 live | Creative Audily |
|---|---|---|---|---|
| | Rs.950-1,800 | Rs.750-2,000 | Rs.3,500-4,000 | Rs.13,500-14,500 |

| UPS | PowerTree | Prolink 600VA | PowerTree1.2KVA | Mercury |
|---|---|---|---|---|
| | Rs.3,500-4,000 | Rs.4,000-4,500 | Rs.7,250-8,000 | Rs.3,500-8,000 |

| PRINTER | Canon (5200) | Epson (4300) | HP (3535) | LX 300+ |
|---|---|---|---|---|
| | Rs.4,500-5,750 | Rs.5,000-6,250 | Rs.5,600 | Rs.17,000-18,000 |

| SCANNERS | HP3500 | HP2400 | Mercury |
|---|---|---|---|
| | Rs.14,000-15,000 | Rs.8,750-10,000 | Rs.5,000-5,100 |

| DUST COVER |
|---|
| Rs.250- 350 |

| SPEAKER | Creative | Genius | OEM | Subwoofer Creative |
|---|---|---|---|---|
| | Rs.1,000-1,250 | Rs.1,250-1,500 | Rs.700-1,000 | Rs.3,000-3,500 |

| CD DRIVE (52x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.1,700-1,900 | Rs.1,800-2,500 | Rs.1,900-2,500 | Rs.1,900-3,000 |

| DVD DRIVE (16x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.3,750-4,250 | Rs.3,500-4,000 | Rs.3,750-4,000 | Rs.3,600-4,000 |


| CD WRITERS | Samsung | Mercury | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.3,600-3,750 | Rs.3,500-4,250 | Rs.3,600-4,000 | Rs.3,900-4,500 |

| DVD WRITERS | Mercury | Benn | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.7,000-7,500 | Rs.10,000-12,000 | Rs.8,000-10,000 | Rs.9,000-10,000 |

| FAX MODEM(EXT) | A2tec USB | A2tex Serial |
|---|---|---|
| | Rs.2,500-3,000 | Rs.2,000-4,000 |

| CASING | P IV | Mercury |
|---|---|---|
| | Rs.2,350-4,500 | Rs.2,850-3,500 |

| Item | Brand | Price |
|---|---|---|
| MOTHER BOARD | PIV (Intel) | Rs.5,000-9,000 |
| FLOPPY DISKETT | Imation (1b | Rs.300-35 |
| FLOPPY DRIVE | Sony | Rs.900-1,00 |
| COOLING FAN | AMD | Rs.500-700 |
| PROCESSOR | 2.2GHz(Intel) | Rs.13,000-15,000 |
| TV+RADIO CARD | PixelView | Rs.3,750-4,500 |
| INTERNET MODEM(EXT) | D-Link | Rs.3,500 -4,25 |
| DIGITAL CAMERA | Mercury | Rs.13,000-20,000 |
| BLANK CD | 06M | Rs.23.00-26.00 |
| KEY BOARD | Mercury | Rs.400 -4,000 |
| MOUSE | PS2 Normal | Rs.250 - 350 |
| INTERNET MODEM (INTERNAL) | D-Link (56 | Rs.1,000-1, |
| POWER SUPPLY | Mer | Rs.1,2 |
| WEB CAMARA | Crea | |
| EXT.FLOPPY DRIVE | | R |















கே: Monitor, Compo TV Box என்பவற்றைப் பயன்படுத்தி சாதாரண தொலைக்காட்சி சேவைகளைப் பார்வையிடலாமா? என்னுடைய PIII கணினியை Start பண்ணியதும் ஒரு சில நிமிடங்களில் எந்தவொரு message உம் வராமல் Shut Down ஆகிறது. இதற்கு என்ன காரணம்?

எம்.செந்தூரன்,
பாண்டிருப்பு-02, கல்முனை.

ப: நீங்கள் குறிப்பிடும் Compo TV Box என்பது ஒரு External TV Card ஆக இருந்தால், கணினியை On செய்யாமலே நேரடியாக அதனை அன்ரெனா, Monitor ஆகியவற்றுக்கு இணைத்து தொலைக்காட்சி சேவையை இரசிக்கலாம்.

ஒரு கணினி Start ஆகும்போதே Shut Down ஆகிறதென்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதற்கும் உங்களுடைய கணினியின் Configerations க்கும் ஏதும் தொடர்பு இருக்கவேண்டும் என்பதில்லை (நீங்கள் அவற்றையும் குறிப்பிட்டிருந்தீர்கள்). இது பெரும்பாலும் ஒரு Hardware பிரச்சினையாகவே இருக்கமுடியும். எனவே ஒரு நல்ல Computer Technician இடம் கொடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதே நல்லது.


பதிலளித்தவர்: உ.சேக்கிழான்

கே: Yahoo வில் E-mail முகவரி வைத்துள்ளேன். நான் எனது Password ஐ மாற்ற என்ன செய்ய வேண்டும்?. G-mail இல் மின்னஞ்சலை உருவாக்க யாராவது Invite பண்ண வேண்டுமா? கணினி ஒன்றின் தற்போதைய விலைகள் பற்றித் தெளிவாகக் கூறவும்.

வி.மயூர ஹாஜினி,
கிளிநொச்சி.

ப: உங்கள் yahoo mail password ஐ மாற்றுவதற்கு பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

1. உங்கள் yahoo accountக்கு sign in செய்து, உங்கள் பக்கத்துக்குள் நுழையுங்கள்.
2. உங்கள் பக்கத்தின் வலதுபுற மேல் மூலையில் உள்ள Options ஐ கிளிக் செய்யுங்கள்.
3. புதிதாகத் திறக்கும் பக்கத்தில் இடதுபக்க நிரலில் கடைசியாக இருக்கும் Account Information என்பதை கிளிக் செய்யுங்கள்.
4. இப்போது மீண்டும் உங்கள் Password ஐக் கொடுத்து Signin செய்யுங்கள்.
5. இப்போது திறக்கும் Yahoo Account Info என்ற பக்கத்தில் Change Password என்பதை கிளிக் செய்து, உங்கள் பழைய Password ஐயும், நீங்கள் புதிதாகக் கொடுக்க விரும்பும் Password ஐ இரண்டு தடவைகளும் கொடுத்து Save செய்யுங்கள்.







G-mail மின்னஞ்சலை உருவாக்க இப்போது யாரும் invite செய்ய வேண்டும் என்பதில்லை. கணினி மற்றும் பாகங்களின் தற்போதைய சந்தை விலைப் பட்டியலைத் தனியாக ஒரு பக்கத்தில் தந்திருக்கிறோம்.

பதிலளித்தவர்: உ.சேக்கிழான்

கே: எனது கணினியில் (P4) WindowsXP ஒப்பரேட்டிங் சிஸ்டம் நிறுவியுள்ளேன். அதில் Stand By என்ற Option active இல்லாமல் இருக்கின்றது. இதனை Active ஆக்க என்ன செய்யவேண்டும்?

தி.இளங்குமரன், கிளிநொச்சி

# Desk

ப: VGA Card இற்குரிய Driver கணினியில் நிறுவப்படாமையே இந்தப் பிரச்சினைக்குரிய முக்கிய காரணமாகும். உங்கள் கணினியில் பொருத்தப்பட்டிருக்கும் மற்றைய ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள் (இயங்குதளங்கள்) போன்றல்லாது XP Operating System நிறுவப்படும்போதே கணினியில் உள்ள அனைத்து சாதனங்களுக்கும் Card களுக்கும் உரிய Driver மென்பொருள்களை தனது சேமிப்பில் இருந்து நிறுவிக் கொள்ளும்.

ஆயினும் சில XPக்கு பின்வந்த Cardகள், சாதனங்களின் Driver Softwareகள் XP Operating System உடன் சேர்க்கப்பட்டிருக்காது. அதனால் அது ஏறக்குறைய ஒத்துவரக்கூடிய ஒரு Driver மென்பொருளை இதன் போது எடுத்து நிறுவிக்கொள்ளும். இதனால் சில வேளை இந்த Stand by மற்றும் Hibernate விடயங்கள் இல்லாதிருக்கும்.

இதற்கு நீங்கள் உங்கள் கணினி விற்பனையாளரினால் வழங்கப்பட்ட VGA Card இற்கான மென்பொருள் CD யினை CD ROM இல் இட்டு நிறுவலாம். அல்லது Computer இல் வலது சொடுக்கல் செய்து பெறப்படும் மெனுவில் Properties இனை சொடுக்கி பெறப்படும் சாளரத்தில் Hardware என்ற Tab இனை சொடுக்கிப் பெறும் பக்கத்தில் Device Manager என்பதில் சொடுக்கினால் வரும் சாளரத்தில் Display adaptors என்பதில் சொடுக்கி அதன்கீழ் வரும் Driver இன் பெயர் கொண்ட தெரிவில் இரட்டை சொடுக்கல் செய்து கிடைக்கும் புதிய சாளரத்தில் Driver என்ற Tab இனை சொடுக்கவேண்டும்.

அப்போது தெரிகின்ற பக்கத்தில் Update Driver என்ற விசையினை சொடுக்க புதிய சாளரத்தொகுப்பு (Wizard) கிடைக்கும். அதிலே நேஒவ விசையினை அழுத்தி னால் உரிய Driver ஆனது CD ROM இல் இருந்து கணினியில் நிறுவப்படும். இதன்பின் Finish என்ற விசையுடன் கூடிய பக்கம் மேற்குறித்த சாளரத் தொகுப்பில் கிடைக்கும். அப்போது Finish இனை அழுத்தி கணினியினை மீளியக்கம் செய்தீர்களாயின் Stand by உங்கள் Turn Off சாளரத்தில் active ஆகும். மேற்குறித்த நேஒவ விசையினை அழுத்தும் போது Install the Software automatically என்ற தெரிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

பதிலளித்தவர்: **த.தவரூபன்,** இயக்குநர், SPEED IT NET, யாழ்ப்பாணம்.

## வெல்லுங்கள்! இலவச PC Times

தமிழ் PC Times இன் மூன்று மாத இதழ்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு.

கீழுள்ள கணினி அறிவியல் கேள்விக்கான பதிலை ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்பி, மூன்று மாதங்களுக்கான PC Times இதழ்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


சரியான பதிலை எழுதியனுப்பும் 10 அதிர்ஷ்டசாலி களுக்கு PC Times இதழ்கள் இலவசமாக அனுப் பிவைக்கப்படும்.

**கேள்வி: Hard Disk ஒன்றில் கோவைகள் (Files) சேமிக்கப்படும் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

பதில் எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

**Win PC Times**
**No.8, Hunupitiya Cross Road,**
**Colombo-02**

குறிப்பு: உங்கள் பெயர், தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்



# தமிழில் இனிய வலைத்தளங்கள்

எஸ். எச்.எம். பஸ்லான்
தூயதோமர் பாடசாலை

உலகிலேயே அதிகமான தளங்களைக் கொண்ட மொழிகளுள் தமிழ் மொழியும் முன்னணியில் உள்ளது என்பதை பறை சாற்றும் வகையில் எண்ணிலடங்கா தமிழ்த் தளங்கள் இணையத்தில் உலா வருகின்றன. அவை உலகத் தமிழர்களிடையே ஒரு நட்புப் பாலமாக வும் திகழ்கின்றன. அப்படிப்பட்ட தமிழ் தளங்களில் சுவையான சில தளங்களை இங்கே அறிமுகம் செய்கி றோம்.

## தமிழில் வாழ்த்து மடல்கள் அனுப்ப!

இத்தளம் ஒரு பல்சுவைத் தளமாக உள்ளது. இதில் தினம் ஒரு குறளும் அதற்கான விளக்கவுரையும் அளிக்கப்படுகின்றது. மேலும் தமிழில் வாழ்த்து மடல்கள் பகுதி ஒன்று உள்ளது. இப்பகுதியில் பிடித்தமானவர்களுக்கு தமிழில் வாழ்த்து மடல்களை அனுப் பலாம். மின் நண்பர்கள் (e-pals), சிரிப்புகள், திருமண தகவல் பக்கம், அரட்டை மற்றும் பொன்மொழிகள் போன்ற பகுதிகளும் உள் ளன. இவற்றில் மின் நண் பர்கள் பகுதியில் பதிவு செய்து கொண்டால் உலகம் முழுவதிலும் இருந்து தமிழ் நண்பர்களைப் பெறலாம். **தளத்தின் பெயர் : www.tamilworld.com**









## திரைப்படப் பாடல்களைக் காட்சியமைப்புடன் இரசிக்க

இத்தளத்தில் தமிழ்த் திரைப் படங்களின் பாடல்களை காட்சியமைப்புடன் கண்டு இரசிக்கலாம். தமிழில் வெற்றி யடைந்த பல திரைப்படங் களின் பாடல்களை இத்தளம் தன்னுள் கொண்டுள்ளது. மேலும், கவிதைத் தொகுப் புக்களும், திரைப்பட ஒளிப் படங்களின் தொகுப்புக்களும் இத்தளத்தில் உள்ளன.

**தளத்தின் பெயர் : www.tcfm.com**



## பிடித்த நடிகர்களின் அழகான ஒளிப்படங்கள் காண!




இத்தளம் தமிழின் முன்னணி திரை நட்சத்திரங்களின் ஒளிப்படங்களைத் தொகுத்து வழங்கியுள்ளது. குரல்வழி அரட்டை அறையும் இத்தளத்தில் உள்ளது. தமிழ்ப் படங்களில் சிறந்த படங்களை இத்தளம் வரிசைப்படுத்தியுள்ளது.

**தளத்தின் பெயர் : www.tamilfix.com**

## நகைச்சுவை பிரியர்களுக்கான தளம்!



நீங்கள் நகைச்சுவையாளரா? நகைச்சுவையில் விருப்பம் உள்ளவரா? அப்படியெனில் இத்தளம் தான் உங்களுக்கு ஏற்ற தளம். கடி ஜோக்குகளும், சினிமா தொடர்புடைய சிரிப்புகளும், கிரி-கிந்தி என்ற தலைப்பில் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் சிரிப்புகளும், கந்தப்பாவும் சோமண்ணாவும் என்ற தலைப்பில் இலங்கையின் நகைச்சுவை பகுதியும், ஐடியா ஐயாசாமி ஜோக்ஸ் என்ற தலைப்பில் பல சுவையான சிரிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன.




**தளத்தின் பெயர் : www.Sirippom.com**

## புதிய கணினி வெளியீடுகளை அறிந்துகொள்ள!



இத்தளத்தில் கணினி தொடர்பான செய்திகள், கணினியில் மென்பொருள், வன்பொருள், விலைப்பட்டியல், புதிய வெளியீடுகள், புதிய கணினி கண்டுபிடிப்புகள் போன்றவை தொகுக்கப்பட்டுள்ளன.

**தளத்தின் பெயர் : www.tamilsoftware.com**







"என்னது கபாலி இ-மெயில் அனுப்பியிருக்கானா?"

"ஆமா சார். மாமூல் கேட்டு நேர்ல வரக் கூடாதாம். கேட்காமலே தருவானாம். மீறி வந்தா சிஸ்டத்துல உள்ள கேஸ் ஃபைல்ஸ்ல வைரஸ் பரப்பிடுவேனு மிரட்டியிரிக்கான் சார்!"

### மேலும் சில பொழுது போக்கு தமிழ்த்தளங்கள்

www.minoviyum.com
www.vanavil.com
www.Tamilmovie.com
www.raaga.com
www.mediaring.com

# காது கேளாதவர்களுக்கு மூக்குக் கண்ணாடி





புதுவரவு

இதென்ன பிதற்றல்? எழுத்துப் பிழையோ என்று நினைக்கிறீர்களா?. அப்படியில்லை. சரியாகக் காது கேட்காத பிரச்சினை உள்ளவர்களுக்கு உதவும், மூக்குக் கண்ணாடி வடிவத்தை ஒத்த செவிப்புலக் கருவியொன்றை (Hearing Aid) நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த செவிப்புலத் தொழில்நுட்ப பல்கலைக்கழகமும், Varibel என்ற டச்சு நிறுவனமும் இணைந்து தயாரித்திருக்கின்றன.

வழமையான செவிப்புலக் கருவிகள் சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்து ஒலிகளையும் அதிகரிக்கச் செய்வதால் (Amplify) பொது வைபவம் போன்ற அதிகம் இரைச்சலான இடங்களில் ஒருவர் பேசுவதை தெளிவாகக் கேட்பது சிரமமாக இருக்கும். இரைச்சலையும், ஒருவர் பேசும் ஒலியையும் ஒரே அளவாக இந்தச் செவிப்புலக் கருவி அதிகரித்துக் கொடுப்பதால், இரைச்சல் தாங்காமல் அந்த இடத்தை விட்டே ஆள் நழுவவேண்டியிருக்கும்.

ஆனால், நெதர்லாந்து நாட்டுத் தயாரிப்பான இந்த மூக்குக் கண்ணாடி வடிவிலான செவிப்புலக் கருவியில், Frame இன் முன்புறத்திலும், பக்கங்களிலுமாக 4 microphoneகள் ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பொருத்தப்பட்டு, ஒலிகள் சரியாகச் சேகரிக்கப்பட்டு, இரைச்சலைத் தவிர்த்து, பேச்சொலிகளின் வீச்சம் மட்டும் அதிகரித்து வழங்கப்படுவதால் (Amplify), ஒருவர் பேசுவதைத் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்கும்.

நெதர்லாந்து சந்தையில் மட்டும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் இந்தச் செவிப்புலக் கருவியைத் தயாரிப்பதில் Philips நிறுவனமும் தற்போது இறங்கியிருப்பதால், விரைவில் உலகம் முழுவதிலும் இதைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இனிமேல் யாராவது மூக்குக்கண்ணாடி போன்ற ஒன்றை அணிந்திருந்தால், அவருக்கு கண்ணில்தான் பிரச்சினை என்று எண்ணிவிடாதீர்கள்.

## Sony Ericsson V630i 3G Musicphone



Music Phone தயாரிப்பில் முன்னணி வகிக்கும் Sony Ericsson நிறுவனம், V630i என்ற புதிய 3G Music Phone ஒன்றை ஐக்கிய இராச்சிய Vodafone வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது. வழமையான Walkman Brand கைத்தொலைபேசிகளிலுள்ள அதே வசதிகளைக் கொண்டுள்ள இந்தப் புதிய தயாரிப்பில் 10MB internal memoryயுடன், Memory Stick பயன்படுத்தக்கூடிய வசதியும் உள்ளது. 176x220 display, 2 mega pixel camera, trimode GSM support, மற்றும் A2DP for Bluetooth stereo output ஆகியவற்றைக் கொண்டுள்ள இந்தக் கைத்தொலைபேசி ஏற்கனவே சந்தையிலுள்ள Sony Ericsson W810i கொண்டுள்ள வசதிகளையே கொண்டிருக்கிறது என்றாலும், V630i யிலுள்ள A2DP வசதி இந்தத் தயாரிப்பின் தனித்துவமான அம்சமாகும்.

# Hard Disk Camcorder



புது வரவு
New Arrivals

தொடர்ந்து 7 மணி நேரம் DVD தராதரத்தில் Video ஒளிப்பதிவு செய்யக்கூடிய Hard Disk Camcorder ஒன்றை ஜப்பான் நாட்டின் JVC நிறுவனம் தயாரித்துள்ளது. Everio GZ-MG 505 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த Camcorder இல் நீங்கள் படம்பிடிக்கும் காட்சிகள் Video Cassette இலோ, DVD யிலோ அல்லது Memory Chip இலோ பதிவு செய்யப்படுவதில்லை. இவற்றுக்குப் பதிலாக கணினிகளில் நாம் பயன்படுத்துவது போன்ற, ஆனால் அதைவிடச் சிறிய 1.8 அங்குலமேயான 30GB Hard Disk V ஒளிப்பதிவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. 1.33mega-pixel CCD, 3.2-32mm/F1.8-2.4 Zoom lens ஆகியவற்றை இந்த Camcorder கொண்டுள்ளது. இந்த மாதம் சந்தைக்கு வரவுள்ள இதன் விலை 1,440 அமெரிக்க டொலர் (நமது பணத்தில் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் ரூபா) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பு து வ ர வு

# Toptone M808





Portable Media Player உடன் கூடிய Skype Phone கருவியொன்றை சீன நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. Toptone என்று பெயரிடப்பட்டுள்ள இந்த 1.2 அங்குல தடிப்பைக் கொண்ட கருவி, FM Radio, ஒலிவடிவக் கோவைகளையும் (MP3, WMA, WAV files), video ஒளிப்பதிவுக் கோவைகளையும் (WMV, MPEG-1/2/4, AVI files) சேமித்து வைக்கக்கூடிய 512MB flash memory, 65k colour OLED screen, built-in Microphone ஆகியவற்றைக் கொண்டுள்ளது. USB Drive உடன் கூடிய இந்தக் கருவியை இணைய இணைப்பு வசதி கொண்ட கணினியுடன் இணைத்த மாத்திரத்தில், மென்பொருள் installation செய்யவேண்டிய அவசியமேதுமின்றி Skype Phone இயங்கத் தொடங்கும். இந்தக் கருவியில் உள்ள Sound System ஐப் பயன்படுத்தியே Skype Phone வேலை செய்வதால், உங்கள் கணினியில் Sound Card, Microphone, Earphone இல்லாவிட்டாலும் கூட இந்தக் கருவியூடாக நீங்கள் தொலைபேசியில் உரையாட முடியும்.

# Foss நோக்கிய நகர்வு




இன்றைய உலகம், மிகவும் துரிதமாக **Free and Open Source Software (Foss)** நோக்கி கவனத்தைத் திருப்பியுள்ளது வெகுவாக உணரப்படுகின்றது.

பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து. கொள்வனவு செய்யும் கட்டுப்பாடுகளையுடைய Windows, Office போன்ற மென்பொருள்களை போலல்லாது, FOSS இலவசமாகக் கிடைப்பதோடு, அதனைப் பெறும் எவருக்கும் தன் விருப்பப்படி, பிரதி செய்து ஏனையோருக்கும் பகிர்ந்தளிக்கும் உரிமையும் கிடைக்கும். இதனால் இவை உலக மக்கள் பலராலும் அண்மைக் காலமாக மிகவும் விரும்பிப் பாவிக்கப்படுகின்றன. Free Software என்றால், அதனைப் பெறுபவர், அதனை பயன்படுத்த, பிரதி பண்ண, விநியோகிக்க, மேலதிக ஆராய்ச்சி செய்ய முடியுமென்றாலும், அவற்றைத் தொகுக்க முடியாது. ஏனெனில் இவற்றுடன் அம்மென்பொருள்களின் செய்திரல் குறிப்பு அடங்கிய (Programming Statements), ஆதார மூலக்குறி (Source Code) தரப்படுவதில்லை. ஆனால் Open Source Software இதிலிருந்து மாறுப்பட்டது. ஏனெனில், இவை Source Code உடன் கிடைக்கப் பெறுவதனால், மேலதிக பண்புக் கூறுகளைச் சேர்க்க, தொகுக்க முடியும்.




எமது நாட்டிலும் **Open Source** பற்றிய விழிப்புணர்வும், நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் Open Source தொடர்பில் கடமையாற்றும் இலங்கை லினக்ஸ் பயனாளர்கள் குழுமம் **(LK-LUG Lanka- Linux User Group)** பல விடயங்களை முன்னெடுத்து வெற்றியும் கண்டுள்ளது. குறிப்பாக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக செயற்றிறன் மிக்க தரவுத்தள (Database) உருவாக்கத்திற்கான மென்பொருளை 'சஹானா' செயற்றிட்டத்தின் மூலம் உருவாக்கியதைக் குறிப்பிடலாம். அத்தோடு, அண்மையில், LK-LUG இனால் இலங்கைக்கே தனித்துவமான Linux பதிப்பாகிய 'தப்ரபேன்' (Taprobane) எனும் operating System வெளியிடப்பட்டதையும் குறிப்பிட்டாக வேண்டும். இக்குழுமத்தில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும், சகல துறைகளையும் சார்ந்த, சகல வயது மட்டங்களிலுமுள்ள சுமார் 100இற்கும் அதிகமான Linux பயனாளர்கள் அங்கம் வகிப்பதுடன், இவர்கள் நாட்டில் Open source மென்பொருள்களின் பாவனையை அதிகப்படுத்தத் தேவையான விடயங்களில் ஆர்வமாகச் செயற்படுகின்றார்கள். இது மென் பொருள்களின் சுதந்திரமான தன்மை தொடர்பில் எமது எதிர் காலம் வலுவாக அமையுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

இலங்கை லினக்ஸ் பயனாளர்கள் குழுமம், (LK-LUG), இலங்கை மென்பொருள்கள் மன்றம் (LSF-Lanka Software Foundation) மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA- Information and Communication Technology Agency) ஆகியவை கூட்டாக இணைந்து சர்வதேச திறந்த ஆணைமூல வலையமைப்பு (IOSN- International Open Source Network) எனும் ஐக்கிய நாடுகளின் (UN) அமைப்புடன் தொடர்பான நிறுவனத்தினால்

அறிமுகம் செய்யப்பட்ட மென்பொருள் சுதந்திர தினத்தை **(Software Freedom Day)** கடந்த வருடம் செப்டம்பர் மாதம் கொழும்பில் கொண்டாடி யதுடன், இதன்போது Foss தொடர்பான தெளிவான விளக்கங்கள் மற்றும் பாவனை தொடர்பான உத்திக ளென்பன ஆராயப்பட்டன.

FOSS மக்களால் விரும்பப்படுவ தற்கு இன்னொரு காரணம், அவை Linux தளமேடையில் (Platform) மட்டுமல்லாது, Windows Platform இலும் மிகவும் சிறப்பாக இயங்கக் கூடிய தன்மையைக் கொண்டிருப்ப தாகும். எடுத்துக்காட்டாக Mozilla Firefox எனும் இணைய உலாவி (Internet Browser), Mozilla Thunderbird எனும் மின்னஞ்சல் சேவைப்பயனர் (Email Client), Open Office எனும் அலுவலகப் பாவனை மென்பொருள் தொகுதி (Office Packages) என்பன வற்றைக் கூறலாம். இம் மென் பொருள்களின் சிறப்பியலபுகள் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம்.

இவ்வாறாக Foss நோக்கிய மக்களின் வேகமான நகர்வின் காரணமாக, அதிகம் பாதிக்கப்படுவது யார் தெரியுமா? வேறு யாருமல்ல! உலகில் 90 சதவீதமான கணினிகளில் பயன்படுத்தப்படும் மென்பொருள்களின் உரிமையைக் கொண்ட Microsoft நிறுவனமாகும். இந்த FOSS நோக்கிய நகர்வின் வேகத்தை கட்டுப் படுத்தும் நோக்குடன். Windows XP Starter Edition எனும் பெயரில் குறைந்த விலையில் தமது Operating System மென்பொருளை மலேசியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு வழங்க Microsoft நிறுவனம் இணங்கியுள்ளது.

இருந்தபோதிலும், Open Source மென்பொருள்கள் தொடர்பான செயற்றிட்டங்களை பல நாடுகள் துரிதமாக அமுல்படுத்துவதையும் காணமுடிகிறது. ஜப்பான், சீனா, மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் Linux ஐ அடிப்படை யாகக் கொண்ட Asianux எனும் Operating System ஐ உருவாக்கும் பணிகளை ஆரம்பித் துள்ளன.







பல ஆபிரிக்க நாடுகளில் பாடசாலைகளில் பாவிக் கப்படும் கணினிகளில் Linuxஐ அடிப்படையாகக் கொண்ட Ubuntu எனும் Operating System நிறுவப்பட்டுள்ளது. Ubuntu எனும் Operating System பற்றி எதிர்வரும் காலங்களில் விரிவாக ஆராய்வோம்.

கடந்த வருட ஆரம்பத்தில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு, உலகிலே மிகவும் பிரபல்யமான கணினி உற்பத்தி நிறுவனமான 'ஹெவ்லெட் பெக்கார்ட்' (hp-hewlet-packard), தமது கணினிகளின் Linux Operating system இனை நிறுவி விற்பனை செய்தது. சட்டவிரோத மென்பொருள்களின் பாவனையை தடை செய்யும் சட்டங்களை Microsoft நிறுவனம் பல நாடுகளுடனுமிணைந்து அமுல்ப்படுத்து வதும் கவனிக்கப்படுதல் வேண்டும்.

அத்தோடு, Microsoft நிறுவனத்தினால் கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், போலி Windows XP இறு வட்டுகளை (CD) பற்றிய தகவல்களை சேகரிக்கும் செயற்றிட்டமும் (The Windows XP Counterfeit Project) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நிலைமைகள் இருக்க, இவற்றுக்கு சரியான தீர்வு, Open Source மென் பொருள்களினை எமது கணினிகளில் நிறுவி (Install) பாவிப்பதைத் தவிர வேறெதுவும் இருக்க முடியுமா?

1998ஆம் ஆண்டு விஸ்வநாத் ரத்னவீர என்ற பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியரால் 30 மாணவர்களின் பலத்துடன் LK-LUG ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக அதிகரித்துவந்த இதன் உறுப்பினர் எண்ணிக்கை, நாவலவிலுள்ள திறந்த பல்கலைக் கழகத்தில் கலாநிதி அசோகா கருணானந்த தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய மாணவ குழுவினால் மேலும் பெருகியது. LEARN எனப்படும் கல்வி மற்றும் ஆய்வுக்கான இலங்கை வலையமைப்பு(Lanka Education and Research Network) என்ற அமைப்பைச் சேர்ந்த கலாநிதி நிமால் ரத்னாயகா இந்தக் குழுவினருக்கு முதன்முதலில் இணையத்தில் இடம் (Web Space) வழங்கி ஊக்குவித்தார். இவர் 1993ஆம் ஆண்டிலிருந்து Linux பாவனையாளராக இருந்து வருபவர்.

தற்போது இலங்கையின் சகல பாகங்களிலும் பலவிதமான தொழில், மதம், அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட நூற்றுக் கணக்கான உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம்பெறுகிறார்கள். இந்த அமைப்பில் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற உத்தியோகபூர்வ பதவி அந்தஸ்துக்கள் எதுவும் கிடையாது. சுதந்திரமான, அறிவுபூர்வமான சிந்தனைகொண்ட தனிநபர்கள் ஒரு பொதுவான இலக்குடன் இந்த அமைப்பில் இணைந்து கொண்டுள்ளனர்.

எல்லா அமைப்புக்களையும் போலவே, இந்த அமைப்பின் உறுப் பினர் களுக்கிடையிலும் கருத்து வேறுபாடுகள், மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிறையவே உள்ளன. ஆனால், இவை எல்லாவற்றையும் புறந்தள்ளி, தமக்குள் பொதுவாக இருக்கும் சிந்தனையான, மென்பொருள்கள் அனைவருக்கும் இலவசமாக கிடைப்பதுடன், அவற்றை மறுசீரமைப்புச் செய்து மீண்டும் சமுதாயத்துக்கு வழங்குதல் என்ற கொள்கையில் தமது கவனத்தைக் குவித்துச் செயற்பட்டு வருகின்றனர். சமுதாயத்துக்கு எதையாவது திரும்ப வழங்குதல் என்ற இவர்களது நம்பிக்கையே இவர்களை இயக்கும் பிரதான உந்துசக்தியாக இருக்கின்றது.

# Medi@Show




Icon









## ஸ்க்ரீன் சேவர்

ஒளிப்படங்களைக் கொண்டு **Screen Saver**களை உருவாக்கக்கூடிய மென்பொருள்தான் சைபர்லின்க் மீடியாஷோ **(Syberlink Mediashow).** இது **Cyberlink Power DVD** மென் பொருளடங்கிய சீடியுடன் இணைந்து வருகிறது.

மீடியாஷோ மென்பொருள் மூலம் அழகிய Screen Saverகளை இலகுவாக உருவாக்கலாம். Microsoft Powe pointல் பணியாற்றுவது போன்ற அனுபவம் மீடியாஷோவில் கிடைக்கிறது. அனேக மாக எல்லாவிதமான Multimedia File களையும் மீடியாஷோவில் கையாளலாம். ஒளிப்படங்கள், Video Clips, Powerpoint Presentation, ஒலிப் பகுதிகள் எனப் பல்வேறுப்பட்ட File Formatகளை மீடியாஷோவுக்கு Import செய்து அவற்றை விரும்பிய விதத்தில் ஒழுங்குபடுத்தலாம். அத்துடன், அவற்றிற்கு 100க்கு மேற்பட பலவிதமான Text Effects, 2D (Two Dimensional), 3D Transition Effects, Masking Effects, மற்றும் Sound Effects என்பவற்றைப் பிரயோகித்து ஒரு மல்டிமீடியா கலவையுடனான Screen Saver ஆக மாற்றிக்கொள்ளலாம். Screen Saver ஆக மட்டுமன்றி, .exe File ஆகவோ அல்லது HTML File ஆகவோ கூட மாற்றிக்கொள்ளலாம்.


ஒளிப்படங்களை நேரடியாக Scanner ரிலிருந்து அல்லது Digital Cameraவிலிருந்து Import செய்யும் வசதி, ஒலிப்பதிவு (Sound recording) செய்யும் வசதி மற்றும் Video Capture செய்யும் வசதியையும் கொண்டுள்ளது. மீடியாஷோ. Internet Explorer போன்ற வெப் Browser களிலிருந்து Drag and Drop முறையில் படங்களை இலகு வாக இழுத்துப்போடக்கூடிய வசதியையும் கொண்டுள்ளது.



அனைத்துப் பணிகளையும் பட்டன்கள் மூலமாகவே செய் யக்கூடிய வித்தியாசமான இடை முகப்பைக் கொண்ட மீடியாஷோவை இயக்கியதுமே ஒரு Wizard தோன்றி நம்மை வழி நடத்துகிறது.

மீடியாஷோவுக்குப் புதியவர்களுக்கு இந்த Wizard பெரிதும் உதவும். காட்சிகளைத் தொகுத்தல் (Compiling), ஒழுங்குபடுத்தல் (Sorting), அவற்றில் தேவையான effects ஐப் பிரயோகித்தல், Screen Saver ஆகவோ அல்லது .exe File ஆகவோ மாற்றிக் கொள்ளல் என நான்கு கட்டங்களில் நமது பணி நிறைவுபெறு கிறது.

மீடியாஷோ மூலம் Screen Saver உருவாக்குவ தெப்படி? மீடியாஷோவை ஆரம்பித்ததுமே தோன்றும் Wizard மூலம் முதலில் ஒளிப்படங்களையோ வீடியோ காட்சிகளையோ மீடியாஷோ விண்டோவுக்கு கொண்டு வர (import) வேண்டும். அல்லது மீடியா ஷோ வின்டோவின் இடது பக்கத்தில் Mouse ஐ நகர்த்தும் போது தோன்றும் Control Panel Import Button இல் க்ளிக் செய்ய தோன்றும் சிறிய Menuவி லிருந்து Import Media Filesஐ தெரிவுசெய்து தேவையான ஒளிப்படங்களை அல்லது Video Clipகளை Import செய்து கொள்ள வேண்டும். அவை மீடியாஷோ விண்டோவில் சிறிய படங்களாக (Thumbnail Pictures) வந்து உட்காரும். அவற்றிலிருந்து விருப்பம் போல் படங்களைத் தெரிவு செய்து கீழுள்ள படச்சுருள் (Film) போன்ற அமைப்பி லுள்ள பகுதிக்கு Drag and






# உருவாக்கலாம் வா!




Drop செய்து படங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். அடுத்து Film அமைப்பிலிருக்கும் முதல் படத்தில் இரட்டை க்ளிக் செய்வதன் மூலம் பகுதிக்கு Drag and Drop செய்து படங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

அடுத்து Film அமைப்பிலிருக்கும் முதல் படத்தில் இரட்டை க்ளிக் செய்வதன் மூலம் Edit Moodக்குச் செல்லலாம். Edit Moodல் வைத்து விண்டோவின் வலது பக்கத்திலுள்ள பொத்தான்களை ஒவ்வொன்றாகத் தெரிவுசெய்து transition, text, sound மற்றும் masking effects என்பவற்றை ஒன்றன் பின் ஒன்றாக பிரயோகிக்க வேண்டும். இதே முறையில் film பகுதியிலுள்ள ஒவ்வொரு படத்தையும் தனித்தனியாகத் தெரிவுசெய்து effects பிரயோகிக்க வேண்டும். இறுதியாக இடது பக்க மூலையிலுள்ள வீடியோ கேமரா போன்ற Iconல் க்ளிக் செய்து இதனை ஒரு Slide Show வாக இயக்கிப் பார்க்கலாம்.

அடுத்து இதனை ஒரு Screen Saverராக மாற்றுவதற்கு Media show Control Panelல் Export Buttonல் க்ளிக் செய்யவேண்டும். அப்போது தோன்றும் சிறிய Message Boxல் Screen Saver தெரிவுசெய்து Export க்ளிக் செய்ய Save as dialogue box தோன்றும். இங்கு (.scr) பைலாக அதனை சேமித்துக்கொள்ள வேண்டும். சேமிக்கப்பட்ட இந்த Fileலை திறக்கும்போது Screen Saverராகத் தொழிற்படும். அத்துடன் அதன் மீது Right Click செய்து வரும் Context Menuவிலிருந்து நீங்கள் உருவாக்கிய Screen Saverரை கணினியில் Install செய்துகொள்ளலாம்.







## தமிழ் PC TIMES — விளம்பரக் கட்டணங்கள்

| | முழுப்பக்கம் | 1/2பக்கம் | 1/4பக்கம் | 1/8பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12,500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

விளம்பரத் தொடர்புகளுக்கு:
Advertising Manager, Wijeya Newspaper Ltd
48, Parkway Building, Park Road, Colombo 2

கோட்டை கிளை:
2D, Sir Chittampalam A Gardiner Mw,
Regent Building, Fort. Tel. 238724

கண்டி கிளை:
1st Floor, Nabeesha Building,
Kotugodella Stret, Kandy. Tel.081 2228492

இரத்தினபுரி கிளை:
99 1/1, Bandaranayaka Mw, Ratnapura.
Tel:045 5440115

**உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளை எழுதியனுப்புங்கள்**

**The Editor**
**Tamil PC TIMES**
**WIJEYA NEWSPAPERS LTD**
**No.08, Hunupitiya Cross Road,**
**Colombo-02,**
**Sri Lanka.**

## தமிழ் PC TIMES — தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

## உள்நாட்டு, வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்

| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் | "அ"வலயம் | "ஆ"வலயம் | "இ"வலயம் | "ஈ"வலயம் |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 408.00 | 900.00 | 1,104.00 | 1,212.00 | 1,548.00 |
| ஆறு மாதம் | 180.00 | 204.00 | 450.00 | 552.00 | 606.00 | 774.00 |

wijeya newspapers
helping shape opinions

**WIJEYA NEWSPAPERS LTD**
No.08, Hunupitiya Cross Road, Colombo-02, Sri Lanka
Tel: 2307789, 2314714 Ext. 626, Fax: 2459725,
email: subs@wijeya.lk

**காசோலைகள்:**
**WIJEYA NEWSPAPERS LTD.** என்ற பெயருக்கு எழுதப்படவேண்டும்.



ஆகாய விமானம் ஒன்றை சிறிய பற்றரிகளினால் இயக்க முடியுமா?.
முடியும் என்று நிருபித்திருக்கிறார்கள் Tokyo Institute of Technology மாணவர்கள்.
160, 'AA' அளவு பற்றரிகளைக் கொண்டு, 10 மீற்றர் நீளமான, 100 கிலோ எடை கொண்ட,
ஒருவர் மட்டும் பயணிக்கக்கூடிய ஆகாய விமானம் ஒன்றை carbon fibre மற்றும்
styform இல் தயாரித்து வெள்ளோட்டமும் விட்டிருக்கிறார்கள்.




Printed & Published By - Wijeya Newspapers Ltd., No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02.